
# கூத்துக் கலைஞர் சி. விஜேந்திரனுடனான நேர்காணல்



## கூத்து மீளுருவாக்கம் அனுபவப்பகிர்வு - 3



நேர்கண்டவர் - த. விவேகானந்தராசா

# கூத்துக் கலைஞர் சி. விஜேந்திரனுடனான நேர்காணல்

நேர்கண்டவர்
த. விவேகானந்தராசா

மூன்றாவதுகண்
உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு
மட்டக்களப்பு

# நூற்தரவு


| | | |
|---|---|---|
| **நூல்** | : | கூத்துக்கலைஞர் சி. விஜேந்திரனுடனான நேர்காணல் |
| **விடயம்** | : | கூத்தரங்கு |
| **ஆசிரியர்** | : | த. விவேகானந்தராசா |
| **அளவு** | : | A5 |
| **முதற் பதிப்பு** | : | 2012 செப்டம்பர் |
| **பக்கங்கள்** | : | 49 |
| **அட்டை வடிவமைப்பு** | : | சுசிமன் நிர்மலவாசன் |
| **கணினிவடிவமைப்பு** | : | மல்டிவிஷன், மட்டக்களப்பு |
| **அச்சிட்டோர்** | : | வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு |
| **வெளியிட்டோர்** | : | மூன்றாவதுகண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக்குழு |

# முன்னுரை

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய அரங்க அறிவியல் பரப்பில் குறிப்பாக எழுத்தில் பதியப்பட்டுள்ளவற்றில் காலங்காலமாக பாரம்பரிய அரங்குகளின் முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கலைஞர்களது எண்ணங்கள் சிந்தனைகள், கருத்துக்கள் என்பவை காணக்கிடைக்காத வையாகவே இருந்து வருகின்றன.

மிகப்பெரும்பாலும் பாரம்பரிய அரங்குகளுடன் நெருக்கமான, உணர்வுபூர்வமான வாழ்வியலை வாழாது அவ்வரங்குகள் பற்றி ஆய்வுகளைச் செய்துள்ள நவீன அறிஞர்களது கருத்துக்களே அரங்க அறிவியல் பரப்பில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இவ்வாறு ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்களில் பாரம்பரிய அறிஞர்கள் படிப்பறிவற்றவர்களாகவும் பாமரர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.இத்துடன் ஆய்வாளர்களுக்குத் தகவல்களை வழங்கியவர்களாக மட்டுமே ஆய்வேடுகளில் பதியப்பட்டுள்ளார்கள்.

இந்தப்பின்னணியில் பாரம்பரிய கலைஞர்களை அறிஞர்களாகவும், ஆய்வாளர்களாகவும் முன்னிலைப்படுத்தி பாரம்பரிய அரங்குகள் பற்றிய மாற்றுப் பார்வையினைச் செலுத்தும் கோட்பாடாகவும் செயற்பாடாகவும் கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாடு இடம்பெற்றுள்ளது. இச்செயற்பாட்டினூடாக பாரம்பரியக் கலைஞர்களின் சிந்தனைகள்,கருத்துக்கள் என்பன வெளிக்கொண்டுவரப்படுகின்றன.

இந்த வெளிக்கொணர்கை என்பது வழமையான முறைமையிலிருந்து வேறுபட்டதாக, பாரம்பரிய கலைஞர்கள் சுதந்திரமாகக் கருத்துப்பகிரும் சூழல்களில், பல்வகை முறைமைகளைக் கொண்டதாக இருக்கின்றன. உதாரணமாக கூத்தர்களுடனான சந்திப்பும் கலந்துரையாடலும் எனும் நிகழ்வுகளினூடாக பாரம்பரிய கலைஞர்களது புலமைத்துவம் வெளிப்பட்டு வருவதைக் காணலாம்.

இந்த வகையில், இலங்கையின் மட்டக்களப்பில் உள்ள சீலாமுனைக் கிராமத்தில் வாழ்கின்ற கூத்துக் கலைஞர்களுள் ஒருவரான சி.விஜேந்திரன் அவர்களுடைய கூத்துக்கலை பற்றியதும், கூத்து மீளுருவாக்க ஆய்வுச் செயற்பாடு பற்றியதுமான அனுபவங்கள், கருத்துக்கள் இந்நூலில் வெளிக்கொணரப்படுகின்றன.

கலைஞர் சந்திப்புக்களில் சி.விஜேந்திரனுடன் தான் உரையாடிய விடயங்களைத் தொகுத்து ஒரு நேர்காணலாக இங்கு பதிவு செய்துள்ளார் த.விவேகானந்தராசா அவர்கள்.

ஏற்கனவே கட்டமைக்கப்பட்டிருக்கும் அரங்க அறிவியலை கேள்விக்கிடமின்றி மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது ஓர் அரங்கியல் மாணவருக்கு அழகன்று. மாறாக விமர்சன பூர்வமாக உண்மையினை வலியுறுத்த முனைவதே சரியான அரங்கியலாளரின் கடமையாகும்.இதுவே ஆக்கபூர்வமான அரங்கின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

அரங்கியலாளரான த.விவேகானந்தராசா அவர்கள் இதுவரை காலமும் கட்டமைக்கப்பட்டிருக்கும் பாரம்பரிய அரங்குகள் பற்றிய அறிவுருவாக்கத்தின் அரசியலை நன்கு விளங்கிக்கொண்டு அப்புரிதலின் பின்னணியில் பாரம்பரிய அறிஞர்களது கருத்துக்களை அவர்களது மொழியில் வெளிக்கொண்டுவர முற்பட்டுள்ளார்.

கூத்துக் கலைஞர் சி.விஜேந்திரனுடைய கருத்து வெளிப்படுத்துகை போன்று இன்னும் பலநூறு பாரம்பரியக் கலைஞர்களது கருத்துக்கள், சிந்தனைகள் வெளிவரும்பொழுது கூத்து மீளுருவாக்கம் எனும் கோட்பாடு முன்மொழியும் கருத்தியல்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

**து.கௌரீஸ்வரன்**
**மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு**
**மட்டக்களப்பு**

# இருண்டகாலத்தின் பாடல்

மட்டக்களப்பு சீலாமுனைக்கிராமத்தின் வடமோடிக்கூத்துப் பாரம்பரியக்கலைஞர் சின்னையா விஜேந்திரனுடன் நிகழ்த்திய நேர்காணல் இங்கு சிறு நூலாக வடிவம் பெற்றிருக்கிறது. என்னைப்பொறுத்த வரையில் இந்நேர்காணலில் வெளிப்படும் பல விடயங்கள் பலவகைகளில் முக்கியத்துவமுடையவை. இந்தியச்சூழலோ , இந்தியாவின் தமிழ்ச்சூழலோ, இலங்கைச்சூழலோ, ஈழத்துத்தமிழ்ச்சூழலோ அல்லது ஆசியச்சூழலோ உலகச்சூழலோ எச்சூழலும் கவனம் கொள்ளவேண்டிய அனுபவங்கள் பல இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பெர்டோல்ட் ப்ரெக்டு தன் பாடலொன்றின் மூலமாக கேள்வியெழுப்புவார். எழுப்பி அதற்கு பதிலும் சொல்வார். "இருண்ட காலத்தில் பாடல் ஒலிக்குமா..? ஒலிக்கும் இருண்டகாலத்தைப்பற்றி.!!"( Will there be a singing in dark times.? Yes.! There will be a singing about dark times.!!) என்று.

உண்மையில் இருண்டகாலத்தில் என்னவிதமான பாடல்கள் ஒலித்தன, ஒலிக்கின்றன? என்று சின்னையா விஜேந்திரன் இந்நேர்காணலில் கூறியுள்ளார். இலங்கையின் தமிழ்பேசும் பகுதிகளில் போர்ச்சூழல் நிலவியபோது அப்போது மட்டுமல்ல, தற்போதும்தான் என்ன விதமான கலைநிகழ்வுகள் அங்கு நடந்தேறின.? அதுவும் அப்பதட்டமான சூழலை அம்மண்ணின் தொல்கலை வடிவங்கள் எவ்வாறு எதிர்கொண்டனவென்பதையெல்லாம் இந்நேர்காணல் பதிவு செய்துள்ளது.

மற்றொன்று, மரபான தொல்கலைவடிவங்கள் மீளுருவாக்கம் செய்யப்படவேண்டுமா.? அது சாத்தியமா.? அப்படி மீளுருவாக்கம் செய்யப்படவேண்டுமெனில் என்ன செய்யவேண்டும் என்ன செய்யக்கூடாது என அம்மக்களினத்தின் பண்பாட்டுநினைவுகளோடு முகிழ்ந்த புதிய அனுபவங்களை பதிவும் செய்துள்ளது இந்நேர்காணல்.

நவீன நாடகச்செயற்பாட்டாளர்களுக்கும் மரபுக்கலைகளுக்கும் உள்ள உறவு எப்போதும் பிரச்சனைக்குரியதாகவே இருந்திருக்கிறது.

நாடகச்செயற்பாட்டாளர்கள் பத்து நாளோ அல்லது ஒருமாதமோ மரபுக் கலையான கூத்துக்கலைஞர்களோடோ அல்லது பிற மரபான கலை வடிவத்தினரோடோ பயிலரங்குகளை நடத்துவதின் பொருளென்ன.? தனது நாடகச்செயல்பாடுகளுக்கு உத்வேகம்பெறவும் மரபான நாடகமொழி குறித்த ஓர் பரிச்சயத்தையும் வெளிச்சத்தையும் பெற்றிடவும்தானே.! ஆனால் பலருக்கு இப்புரிதல் இருப்பதில்லை.

அவ்வொருமாதப்பயிலரங்கில் அக்கலையைக்கற்றுத்தேர்ந்துவிட்டதாக நம்பத்தொடங்கிவிடுகின்றனர். தான் அக்கலையை கற்றுக்கொண்டதாகவும் வெளிக்காட்டத்தொடங்கிவிடுகின்றனர்.

இப்படி மரபுக்கலையை ஆழமாக அறிந்துகொள்வதற்காக நடத்தப்படும் இத்தகைய குறுக்கீடுகள் அக்கலை பற்றி சரியான புரிதலை ஏற்படுத்துவதற்குப் பதிலாக மேலோட்டமான குறைத்துமதிப்பிடப்பட்ட ஒரு புரிதலை உருவாக்குவதில்தான் போய்முடிகிறது.

ஒரு பரதநாட்டியக் கலைஞரோடு ஒரு மாதப்பயிலரங்கில் கலந்துகொண்டுவிட்டு தான் 'பரதம்' பயின்றுவிட்டதாக எந்த நவீன நாடகக்கலைஞரும் சொல்ல முற்படுவதில்லை. ஆனால் 'கூத்துக்கலைஞரோடு' ஒருவாரப்பயிலரங்கில் கலந்து கொண்டவரெல்லாம் தான் கூத்தைக் கற்றுக்கொண்டதாகச் சொல்லத்தொடங்கிவிடுகிறார்.

இது மிகவும் சிக்கலானது. இவை குறித்து ஓர் ஆழமான விவாதங்களை நாம் முன்னெடுக்கத்தவறுகிறோம். இது தமிழ்நாட்டிலுள்ள பிரச்சனை. ஈழத்தில் அவ்வாறிருக்கவில்லை என்றே இந்நேர்காணலைப்படித்த எனக்குத்தோன்றுகிறது.

இந்நேர்காணலைப்படிக்கிறவர்கள் ஈழத்தின் மட்டக்களப்புப்பகுதியில் 'வடமோடிக்கூத்து' என்றறியப்படுகிற அம்மண்ணின் தொல்கலைவடிவம்

எவ்வாறெல்லாம் பேணப்படுகிறது எப்படியெல்லாம் அடுத்த தலைமுறைக்கு கைமாற்றிக்கொடுக்கப்படுகிறது என்பதையறியமுடியும்.

தமிழ்நாட்டில் 'அண்ணாவியார்' என கூத்து கற்றுக்கொடுக்கிற ஆசிரியர்களை நாம் அழைப்பதில்லை. வாத்தியார் என்றோ ஆசிரியரென்றோதான் அழைப்பதுண்டு. படர்க்கையில் கூறும்போது 'குரு' என்று சொல்வதுண்டு.

இங்கு கூத்து சொல்லித்தருகிற 'வாத்தியார்கள்' ராகங்களை, பாடல்களைச் சொல்லித்தருவார்கள், ஆட்டங்களை, அடவுகளைச் சொல்லித் தருவார்கள் வசனங்களை சொல்லித்தருவார்கள். இப்படி சொல்லித்தரும்போது மத்தளம் வாசிப்பவரொருவரிருப்பார் ஆர்மோனியம் வாசிப்பவருமிருப்பார். சில ஆசிரியர்களுக்கு மத்தளமும் ஆர்மோனியமும் வாசிக்கத்தெரிந்து இருந்தாலும் சொல்லித்தரும்போது இப்பணியைச்செய்ய வேறு சிலர் இருப்பர்.

நான் என்ன சொல்ல விழைகிறேனென்றால் கூத்து சொல்லித்தருகிற ஆசிரியர்கள், பாடல்களையும் வசனங்களையும் ஆட்டங்களையும் அடவுகளையும் சொல்லித்தருகிறவராக மட்டும் இருந்தால் போதும். புதிதாகப் பாடல்களைப் புனைகிறவராகக்கூட இருக்கலாம் இருந்தபோதிலும் அவர் மத்தளம் வாசிக்கத்தெரிந்தவராக இருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை. கையிலே தாளத்தை வைத்துகொண்டு ஆட்டத்தின் 'வேகத்தை' உணர்த்தினால் மட்டும்போதும்.

ஆனால் ஈழத்தில் மத்தளம் வாசிக்கத்தெரியாதவர்கள் 'அண்ணாவியராக' இருக்க முடியாது. அதாவது கூத்தைசொல்லித்தருபவர்களாக இருக்கமுடியாது. இதுதான் அடிப்படையாக அங்கு கொள்ளப்படுகிறது. இந்நேர்காணல் அதை உணர்த்துகிறது.

அதுமட்டுமல்ல இவ்வுண்மை நமக்கு வேறு பல விடயங்களையும் சுட்டுகிறது. ஒருகாலத்தில் தமிழ்நாட்டிலும் இப்படியிருந்திருக்கவேண்டும். மத்தளம் வாசிப்பவர், முகவீணை வாசிப்பவர், ஆர்மோனியம் வாசிப்பவர் என்று தனித்தவேலைப்பிரிவினைகள் வெகுகாலமாகவே தமிழகத்தில் உண்டு.

ஆர்மோனியம் ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்புதான் கூத்தில் நுழைந்ததாக மூத்த கூத்துக்கலைஞர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல தமிழ்நாட்டுக்கூத்தில் இந்த மத்தளம் வாசிப்பவர்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சாதியினராகவே இருப்பர். மத்தளம் வாசிப்பவர்கள் ஆசிரியர்களாக இல்லாமல் போனதற்கும் அல்லது ஆசிரியர்களாக இருப்பவர்கள் மத்தளம் வாசிக்கவேண்டிய கட்டாயமில்லாமல் போனதற்கும் இந்த 'சாதிய வேலைப்பிரிவினை' ஒரு காரணமாக இருந்திருக்குமோ எனத்தோன்றுகிறது. இது மேலும் ஆய்வுக்குரியது.

'இங்கு 'சொல்லித்தருதல்' என்ற சொல்லை ஏன் பயன்படுத்துகிறேனென்றால், இச்சொல் கற்றுத்தருதல் என்ற பொருளிலே பயன்படுத்தப்பட்டாலும் பெரும்பாலும் மரபுக்கலைகள் 'வாய் மொழி' மூலமாகவே ' சொல்லித் தரப்படுகிறது' என்பதை உணர்த்தத்தான்.

இந்நேர்காணலிலுள்ள மற்றொரு விடயம் கூத்தில் நிகழும் மீளுருவாக்கம். மீளுருவாக்கமென்பது மிகவும் பிரச்னைக்குரிய ஒரு கருத்தாடலாகும்.

ஒரு பண்பாட்டினை பாதுகாப்பதற்காகவும் மீளுருவாக்கம் செய்வதற்காகவும் செய்யப்படுகிற குறுக்கீடுகளெல்லாம் (interventions) பெரும்பாலும் சீர்குலைவுத்தன்மையுடைய காலத்தை பின்நோக்கியிழுக்கிற செயல்பாடு களாகத்தான் போய்முடிகின்றன. இந்தியச்சூழலில் நடந்த இத்தகைய முயற்சிகள் பலவும் நமக்கு உணர்த்துவது இவற்றைத்தான்.

மேலும் 'மீளுருவாக்க முயற்சிகள்' பலவும் அக்கலையினை மட்டுமன்றி, அக்கலையில் பொதிந்துகிடக்கும் கடந்தகால மதிப்பீடுகளையும் மீளுருவாக்கம் செய்து அவற்றைச் சமகால மதிப்பீடுகளாக வலியுறுத்தத்தொடங்கி விடுகின்றன.

ஆனால் ஈழத்தமிழ்ச்சூழலில், இலங்கையின் தமிழ்பேசும் பகுதிகளில் நடக்கும் இதுபோன்ற குறுக்கீடுகளை அப்படியோர் ஒற்றைப்பொருளில் இனம்காண முடியாது. ஏனெனில் அக்குறுக்கீடுகளின் பின்புலம் வேறு.

ஒடுக்குமுறைக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகும் ஒரு சிறுபான்மை மக்களினம் தாம் பாதுகாப்புடன் வாழவேண்டுமெனில் தங்களது தனித்த பண்பாட்டு அடையாளங்களை கைவிட்டுவிட்டு 'பெரும்பான்மையினரின்' அடையாளங்களை மேற்கொள்ளவும் அவற்றில் அமிழ்ந்து கரைந்துபோகுமாறும் [Assimilation] கட்டாயப்படுத்தப்படுகின்றனர். உண்மையில் இவ்வடையாளமிழப்பு அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்வை உறுதி செய்வதில்லை. மாறாக அடையாளமிழந்த இரண்டாம் தரக்குடிமகன்களாக அவர்களைமாற்றிவிடுகிறது.

இவ்வகையில் 'அடையாளத்தைப் பேணுவதென்பது' அங்குள்ளவர்களைப் பொறுத்தவரை ஓர் உரிமைகோரும் அரசியல் நடவடிக்கையாகவே இருப்பதை நாம் காணுதல் வேண்டும்.

இங்கு மரபுக்கலைகள், குறிப்பாக வட தமிழகத்தின் 'தெருக்கூத்துக்கலை' கிராம சமூகத்தின் விவசாய உற்பத்திமுறையோடு தொடர்புடையது. அம்மண்ணின் வாழ்வியலோடு தொடர்புடையது. இந்த பின்புலத்தோடே அவற்றைப் புரிந்துகொள்ளுதல்வேண்டும். இப்பின்புலத்திலிருந்து அவற்றைப்பிரித்தெடுத்து 'ஓர் கலைவடிவமாக' மட்டும் புரிந்துகொள்ள முயல்வது அதன் முழுமையை நமக்கு உணர்த்தாது.

'அர்ச்சுனன் தபசு' கூத்திற்கு ஒரு விவசாயி தன் நிலத்திலுள்ள ஒரு பனை மரத்தை வெட்டிக்கொணர்ந்து தருகிறார்.

பதினெட்டு நாள் கூத்தின் இறுதியில் 'துரியோதனன் படுகளத்திற்காக' துரியோதனன் உரு செய்ய கிட்டத்தட்ட ஒரு லாரி மண் தேவைப்படும்.இந்த மண்ணை யாரும் காசு கொடுத்துவாங்குவதில்லை. அக்கிராம மக்களின் பொது உழைப்பால் அம்மண் அங்கு கொண்டுவந்து சேர்க்கப்படுகிறது. மற்றொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

கடந்த ஆண்டு, மைய அரசின் 'சங்கீத நாடக அகாதெமி' காஞ்சீபுரத்திற் கருகிலுள்ள புஞ்சரசந்தாங்கலிலுள்ள 'கட்டைக்கூத்துச்சங்கத்தில்' ஓர் ஐந்து நாள் விழாவினை நடத்தியது.

'மரபும் மாறுதல்களும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கும் அதனையொட்டிய விவாதமும் இவ்விழாவில் நடைபெற்றது. பல கூத்துக்கலைஞர்களும் நாடகவியலாளர்களும் இதில் பங்கேற்றனர். கூத்தர்களின் 'உடையலங்காரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்' பற்றி ஒரு நாள் நடைபெற்ற விவாதத்தில் அதாவது கூத்தர்களின் குடைபோல விரிந்திருக்கும் பாவாடை பற்றி ஒரு கருத்து வந்தது. அது விறைப்பாக குடை போல் விரிந்து நிற்க அதனுள்ளே பாலீதின் தாள்களினாலான பாவாடைகளை ஒரு நான்கைந்து சுற்றுக்கள் கட்டி அதன் மீதே இறுதியாக ஆடையினை அணிவார்கள். உள்ளே கட்டப்படும் இந்த ஏற்பாட்டினை அவர்கள் 'டவரு' என்றழைப்பார்கள்.

என்ன நடந்ததென்றால் முதல் நாள் இரவு நடந்த கூத்திலே கூத்தர்கள் 'கிறுக்கி' அடித்து ஆடும்போது அதாவது அடவுகளிட்டு சுற்றி ஆடும்போது அவர்கள் உடை காற்றிலே பறந்து உள்ளே அணிந்திருந்த பாலீதீன் பாவாடைகள் பளிச்சென்று தெரிந்தன. மறுநாள் இதைப்பற்றி பலரும் பேசினர்.

மண்சார் மரபுக்கலையில் இப்படிச் 'சுற்றுச்சூழல் சீரழிவின் அடையாளமான' பாலீதீனை பயன்படுத்துவது உறுத்தலாக இருக்கிறதென்றும் அதன் அழகியலைக் குலைக்கிறதென்றும் சிலர் கருத்து தெரிவித்தனர்.

இப்படி பாலிதீனை பயன்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளதென்பதே அங்கு வந்திருந்த கூத்தர்கள் பலருக்கும் அப்போதுதான் தெரியவந்தது.

இதன் மீது கருத்து தெரிவித்த புரிசை கண்ணப்ப தம்பிரானின் மூத்த மகன் காசித்தம்பிரான் ஒன்றைக்குறிப்பிட்டார். 'பாலீதீனைப் பயன்படுத்துவது அதன் அழகியலைச் சிதைப்பதாக நீங்கள் கருதலாம். நான் அதனை மறுக்கவில்லை. ஆனால் இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்ததென்பதை நீங்கள் அறியவேண்டும். முன்பெல்லாம் கூத்துப்பாவாடைக்குள் 'டவரு' கட்ட 'தாளு கத்தைகளை' த்தான் பயன்படுத்துவார்கள். நெற்கதிர்களை அடித்து உதிர்த்த பிறகு எஞ்சுகிற தாள்கள். இதனை கூரை வேயவும் பயன்படுத்துவார்கள். நன்றாக நீண்டிருக்கும் இவற்றை கலைத்துபோட்டுப் மாடுகளை விட்டு நன்கு மிதிக்கச்செய்து அதாவது

பிணை அடித்து பின்னர்தான் அவற்றை வைக்கோலாக போரிடுவார்கள். வைக்கோலாக உருமாறுவதற்கு முன் உள்ள நிலையைத்தான் 'தாள்' என்பார்கள். அப்போதெல்லாம் கையால் அறுவடை செய்தார்கள். தாள்கள் மிஞ்சின. இப்போது இயந்திரத்தில்தான் அறுவடை செய்கிறார்கள். இயந்திரமானது தாள்களை சிறு சிறு துண்டுகளாக்கி கூளமாக்கி விடுகிறது. தாளும் கிடைப்பதில்லை வைக்கோலும் கிடைப்பதில்லை.

தாள் கத்தைகள் கிடைப்பதே அபூர்வமாகிவிட்டது. எனவே கூத்தர்கள் 'டவரு' செய்ய வேறு உபாயத்தை நாடுகிறார்கள். அதில் வந்ததுதான். இந்த பாலிதீன் 'டவருகள்'." என்று சொன்ன அவர், 'இனி பாலிதீனைத் தவிர்த்து விட்டு இதனை வேறு எவ்வாறு கையாள்வதென்பதை நாங்கள் இனிமேல்தான் முடிவுசெய்ய வேண்டும்' என்றார்..

காசித்தம்பிரான் குறிப்பிட்டதில் நாம் கவனிக்கவேண்டியது எதையென்றால் 'கூத்தின் அழகியல்' விவசாய வாழ்க்கையோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதையும், விவசாயத்தில் ஏற்படுகிற மாற்றம் அதாவது அறுவடை எந்திரங்களின் வருகை 'கூத்தின்' உடையலங்காரத்திலே பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்பதையும்தான்.

மரபுக்கலைகளை இப்படி அதன் 'பின்புலத்தோடு' அதனுடைய 'சூழமைவோடு' வைத்துப்புரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.அப்போதே அதன் முழுமையை நம்மால் உணரவியலும்.

மரபுக்கலைகள், மாற்றங்களுக்கும் மாறுதல்களுக்கும் உட்படாமல் இல்லை. இரவு முழுதும் நிகழ்கிற கூத்தினை இரண்டு மணி நேரத்திற்கோ ஒரு மணி நேரத்திற்கோ நிகழ்த்துவது தற்போது நடக்கிறது. பெண்களும் வேடம் தரிக்கிறார்கள். தீவட்டி வெளிச்சத்திலும் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்திலும் நிகழ்ந்த கூத்து தற்போது 'ஹாலோஜன்' வெளிச்சத்தில் நிகழ்கிறது.ஒலி பெருக்கிகளை பயன்படுத்துகிறார்கள். பெண் பாத்திரங்களின் ஒப்பனை, கூத்துப்பாடல்களின் இசை இவற்றில் அண்மைக்கால பாதிப்புகள் பல குழுக்களிடம் வெளிப்படையாகத்தெரிகிறது.

இந்த மாறுதல்களில் நாம் கவனிக்கவேண்டிய ஒன்று, இவற்றில் எந்த அம்சம் இக்கலையை கூத்தாக வைத்திருக்கிறது அல்லது கூத்தாக இல்லாமல் வேறொன்றாக்கிவிடுகிறது என்பதைத்தான்.

சின்னையா விஜேந்திரனும் இந்நேர்காணலில் இதைத்தான் சொல்கிறார், "கூத்தில மாற்றம் செய்யிறதெண்டுறது கூத்த கூத்தில்லாம செய்யிறதில்ல. கூத்தின்ர அடிப்படையை மாத்தாம அதே நேரம் கட்டாயம் மாத்தவேண்டிய கருத்துக்களை மாத்தி மீள உருவாக்கிறதுதான்" என்கிறார்.

தங்களது மீளுருவாக்க முயற்சிகளில் பெண்களை கூத்தில் வேடமேற்க வைத்ததையும் கூத்தின் கதையாடல்களில் அதாவது நிகழ்த்துப்பிரதிகளில் காலத்திற்கேற்ப மாற்றங்களை கொண்டுவந்ததையும் அவை தந்த அனுபவங்களையும் இந்நேர்காணலில் பகிர்ந்து கொள்கிறார்.

உதாரணமாக 'தர்ம புத்திரன் கதை' என்கிற கூத்தினை 'சிம்மாசனப்போர்' என்று மறு விளக்கம் தந்து மேடையேற்றியிருக்கிறார்கள். அதாவது தர்ம புத்திரன் கதையில் பாண்டவர்கள் நல்லவர்களாகவும், கௌரவர்கள் தீயவர்களாகவும் கொள்ளப்பட்டு தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடைபெறுகிற போராக அவை சித்தரிக்கப்படுவதே வழக்கமான கதையாடலாக இருந்து வருகிறது. ஆனால் இவர்களது 'நிகழ்த்துப் பிரதியில்', இது சிம்மாசனத்திற்காக நடக்கிற போர் இதில் இரண்டு தரப்பினரிடமுமே பிரச்சினைகள் உண்டு என்பது போல மறு விளக்கம் தந்து மாறுதல்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது போல 'ராம ராவண யுத்தத்தை','சீதை சூர்ப்பனகை வதை' என்று பெண்களின் கண்ணோட்டத்தில் ராமாயணக்கதையை மீள்பார்வையிட்டு மேடையேற்றியிருக்கிறார்கள்.

கூத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினராக வருகிற பாத்திரம், குடித்துவிட்டு இழி சொல் பேசுகிறவராக,பலவீனராக., புலம்புகிறவராக, என இழிவாகத்தான் சித்தரிக்கப்பட்டிருக்கும். இவர்கள் இச்சித்தரிப்புகளை கேள்விக்குள்ளாக்கி அப்பாத்திரங்களை தன்னெழுச்சி கொண்டவர்களாக உறுதிமிக்கவர்களாக தமது கூத்தில் வடிவமைத்திருக்கிறார்கள்.

என்னைப்பொறுத்தவரை, சின்னையா விஜேந்திரன் பகிரும் அனுபவங்கள் இந்தியத்தமிழ்ச்சூழலுக்கு முற்றிலும் புதியது.

மரபான கதையாடல்களை மீள்பார்வை செய்து மேடையேற்றுவதென்பது தமிழ்நாட்டின் 'நவீன நாடகச்சூழலில்' இருந்துவருகிற ஒரு விடயம்தான். ஆனால் மரபான கூத்துக்கலையில் இங்கு அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. புரிசை கண்ணப்ப தம்பிரான் குழுவினர் மார்க்குவெஸின் 'பெரிய சிறகுகளுடன் கூடிய ஒரு வயோதிகன்' என்கிற கதையை கூத்தாக நிகழ்த்துகின்றனர். இது நவீன நாடக வெளியில் தான் நிகழ்த்தப்படுகிறதேயொழிய பாரம்பர்யமான கூத்துக்கலையின் நிகழ்த்துவெளியில் அதாவது பதினெட்டுநாள் கூத்தை நிகழ்த்துகிற கிராமத்து கோயில் விழாக்களின் சடங்குவெளியில் நிகழ்த்தப் படுவதில்லை அச்சடங்கின் ஒரு பகுதியாக இவை ஏற்கப்படுவதுமில்லை.

அதுமட்டுமல்ல காஞ்சிபுரத்திலுள்ள ஹன்னா-ராஜகோபால் தம்பதியரின் கட்டைக்கூத்து சங்கம், தங்களது கூத்தில் தொடர்ந்து 'பெண்களையும்' வேடமேற்கச்செய்கின்றது. ஆனால் இப்போக்கு மற்ற கூத்துக்குழுவினரால் இன்னமும் ஏற்கப்படாமலேயிருந்துவருகிறது.

ஆனால் சின்னையா விஜேந்திரன் பங்கெடுத்துள்ள கூத்து மீளுருவாக்க செயற்பாடுகள் அதன் வழியான நிகழ்த்துகைகள் ஒரு சில எதிர்ப்புக ளிருந்தாலும் கிராமத்து சடங்கு வெளியில் ஏற்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு விடயம்.

மட்டக்களப்பின் வடமோடிக்கூத்தில் மாறுதல்களைச்செய்ய தங்களுக்கு உந்துதலாக இருந்தது கிழக்குப்பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைப் பேராசிரியர்.திரு.ஜெயசங்கர் தான் என சின்னையா விஜேந்திரன் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்.

மரபுக்கலைகளில் செய்யப்படும் குறுக்கீடுகள் சில சமயங்களில் பிரச்சினை களாக ஆகிவிடுவதுண்டு. ஆனால் இங்கு அப்படியாகிவிடவில்லை என்பதை சின்னையா விஜேந்திரனின் அனுபவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

எல்லா மரபுக்கலைகளுமே அதன் வளர்ச்சிப்போக்கில் தன்னியல்பான மாறுதல்களைக் கண்டுதான் மாற்றங்களைப் பெற்றுத்தான் வந்திருக்கின்றன. அதில் வலிந்து செய்யப்படும் மாற்றங்கள் சில சமயங்களில் அதன் இயல்பான வளர்ச்சிப்போக்கினை குலைத்து அக்கலைக்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள சுமூகமான உறவை கிழித்தெறிந்துவிடுகிறது.

சின்னையா விஜேந்திரன் பங்கேற்கும் கூத்துச்செயல்பாடுகள் அவ்வாறில்லை என்பதோடு மட்டுமல்ல, அவர்கள் வாழும் சமூகத்தில் கூத்துக்கலையினை இன்னொரு இடத்திற்கு கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதையும் இந்நேர்காணல் நமக்கு தெரிவிக்கிறது. அவர்கள் வாழ்ந்து வந்த பதட்டமான சூழலில் தங்களது இருப்பைத்தெரிவிக்க அவர்கள் கொண்ட எத்தனங்களின் ஆவணமாகவும் இந்நேர்காணலை நாம் காணலாம்.

ஆம் நாங்கள் வாழ்கிறோம். வாழ்வோம்..என முன்னறிவிக்கிறார்கள்..

**பிரளயன்** ஏப்ரல் 30,2012

அரங்கச் செயற்பாட்டாளர் சென்னை



திரு.சின்னையா விஜேந்திரன் அவர்கள் மட்டக்களப்பு சீலாமுனைக் கிராமத்தின் வடமோடிக் கூத்துப் பாரம்பரியத்தில் சிறு வயதிலிருந்தே மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குகொண்டு வருகின்ற மூத்த கூத்துக் கலைஞர்களுள் ஒருவர்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.சி. ஜெயசங்கர் அவர்கள் சீலாமுனைக் கூத்துக்கலைஞர்களுடன் இணைந்து மேற்கொண்ட கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டில் முழுமையாகப் பங்கு கொண்ட கலைஞர்.

கூத்துக்கலையில் தேர்ச்சியுள்ளவரும் சீலாமுனைக் கூத்துப் பாரம்பரியத்தின் கூத்து ஆட்ட முறைகளை அடுத்த தலைமுறையினருக்கு பயிற்றுவித்துவருபவருமான சி. விஜேந்திரனுடனான நேர்காணல் இங்கு இடம்பெறுகின்றது.

**த. விவேகானந்தராசா**

❖ கூத்துக்கும் உங்களுக்குமான ஆரம்பத் தொடர்புபற்றிக் கூறுங்கள்

எங்கட அப்பா ஒரு கூத்துக்கலைஞர். நான் சின்ன வயசிலிருந்தே அவரோடதான் திரியிறது. எனக்குத் தெரிஞ்சளவில் ஒரு எட்டு வயதிலிருந்தே நான் அப்போவோட அவங்க கூத்தாடுற இடங்களுக்கு போறது, பக்கத்திலிருந்து பார்க்கிறது. இப்பிடியிருந்து வரக்குள்ளதான் எனக்கும் கூத்தாடணும் போல ஆசை வந்தது. அந்நேரம் சின்னாக்கள் கூத்தாடுற மிகக் குறைவு. கட்டியக்காரன் பாத்திரம் எண்டாக்கூட ஓரளவு வயது வந்தாப்பிறகுதான் எடுப்பாங்க. என்றாலும் பெரியாக்கள் ஆடிப்பாடிப் பழகக்க சின்னாக்கள் நாங்களும் சும்மா பழகுவம். இப்பிடியிருக்கிற நேரத்தில தான் 90ம் ஆண்டு எங்கட ஊரில் அரங்கேத்தின 'தருமபுத்திரன்' என்ற கூத்தில சகாதேவன் பாத்திரத்திற்கு ஆட எனக்கு சந்தர்ப்பம் கிடைச்சிது.

இதற்கு முதலே சில கூத்துக்களில வேற வேற பாத்திரங்களுக்கு ஆடிப்பழகினன். ஆனால் அரங்கேற்றல்ல. அந்நேரம் (1980கள்) நடந்த வன்செயல் சூழலில கூத்தாடுறது மிகக்குறைவு. எல்லாரையும் சேர்த்து கூத்தாடுறது கஸ்டம் தானே.

தருமபுத்திரன் கூத்த அரங்கேற்றத்தில் ஆடி பிறகு கோயில் கோயிலா ஆடினம். பல பேர் என்மேல பலகாரமெல்லாம் சொரிஞ்சாங்க, பாராட்டி னாங்க. சரியான சந்தோஷமா இருந்திச்சி. இப்பவும் அதை மறக்கேலா.

❖ தருமபுத்திரன் கூத்தினை உங்களது அப்பாவா பழக்கினார்?

இல்லை இல்லை. அந்தக் கூத்த ஊரில வேறொரு அண்ணாவியார் பழக்கினார். நானோ அண்ணனோ ஆடல்ல. சின்னாக்கள்தானே ஆனால் அப்பா கூத்தாடக்க பாத்திருக்கம். அப்பா மத்தளம் அடிக்கிறதப் பார்த்துத்தான் அண்ணன் அடிக்கப் பழகினவன்.

சின்ன வயசிலேயே அண்ணன் ரின்களை (tin) கோர்த்து இடுப்பில் கட்டிக் கொண்டு அப்பா மத்தளம் அடிப்பதை பார்த்து அடித்துத் திரிவான்.



இப்பிடி அடிச்சித் திரிஞ்சி மத்தளம் அடிக்கப் பழகிக் கொண்டிருக்கக் குள்ள தான், மாமாங்கத்தில நடந்த கூத்து அரங்கேற்றம் ஒன்றில திடீரென அப்பா அண்ணன்ட இடுப்பில் மத்தளத்தக் கட்டி அடிக்க வைத்தவராம். சின்னாக்கள மத்தளம் அடிக்க விடாமலிக்கிற சூழலில அப்பா அப்பிடிச் செய்ததுதான் இண்டைக்கு அண்ணன ஒரு பெரிய அண்ணாவியாராக்கியிக்கு.

**❖ நீங்கள் ஆடிய தருமபுத்திரன் கூத்திற்கு பின்பு வேறு என்னென்ன கூத்துக்களில் ஆடினீர்கள்?**

90ல் “தருமபுத்திரன்” கூத்து ஆடினத்துக்குப் பிறகு நாங்க கூத்தாடினது 2002ல் தான் அதற்கிடையில கூத்தாடுப்படல. ஆனால் ஒருதரம் ஊர்ல வசந்தன் அண்ணன் பழக்கின இராவணேசன் என்ற படச்சட்டமேடைக் கூத்தில ஆடினன். எண்டாலும் அதக் கூத்தெண்டு சொல்லேலாதானே.

**❖ ஏன் அதைக் கூத்தென்று சொல்லேலாது? களரியில் ஆடுவதற்கும் படச்சட்டமேடையில் ஆடுவதற்குமிடையில் என்ன வித்தியாசத்தை உணர்கிறீர்கள்?**

கூத்தெண்டா ஒரு கதையை முழுமையா அதன்ஆடல், பாடல், தாளக்கட்டுக்களுடன் சுதந்திரமா ஆடொனும். ஆனால் படச்சட்ட மேடையில ஆடக்குள்ள அந்த முழுமையும் இல்ல, சுதந்திரமும் இல்ல. கூத்தச் சுருக்கி ஒரு சில மணித்தியாலத்துக்க ஒரு சில தாளக்கட்டு, ஆடல், பாடல்களோட அறைகுறையா ஒரு பக்கத்தப் பார்த்து ஆடுறது கூத்துக்கு சரிவராது. கூத்தெண்டா கூத்தா இருக்கோணும்.

**❖ 1990ல் கூத்தாடினத்துக்கு பிறகு மீண்டும் 2002ல் தான் கூத்தாடியதாக சொல்கிறீர்கள் இவ் நீண்டகால இடைவெளியின் பின்பு மீண்டும் கூத்தாடுவதற்கான சந்தர்ப்பம் அல்லது உத்வேகம் எவ்வாறு ஏற்பட்டது?**

கூத்தாடுறத்துக்கு விருப்பமில்லாமலோ இல்லாட்டி கூத்தாடுறத்த விட்டுத்தோமோ என்றில்ல. இந்தக் காலப்பகுதியில கூத்தாடுறத்துக்கான சந்தர்ப்பம், சூழல் அமையல்ல. எல்லோரும் சேர்ந்து கூத்தாட முறப்படல்ல. தொடர்ச்சியா இல்லாட்டியும் இடைக்கிடையாவது கூத்தாடியிக்கலாம். இப்படி இருக்கக்குள்ளதான் 2002ம் ஆண்டு, கெம்பஸில் (Campus/Eastern University) படிச்சிக் கொண்டிருந்த எங்கட ஊரைச் சேந்த கௌரீசன் என்னிடம் வந்து சொன்னார் " மாமா எப்படியாவது இந்த வருஷம் நாம ஒரு கூத்தாடொணும். சேர் (sir) ஒராள் நம்மட ஊர்ல கூத்தப்பற்றி ரிசேச் (Research) செய்யப்போறாராம்" என்று. கெம்பஸிலிருந்து ஜெய்சங்கர் சேரும் (விரிவுரையாளர்- கிழக்குபல்கலைக்கழகம்) கௌரீசனுடன் வந்து ஊரில கூத்தாடினாக்கள் சிலரைச் சந்திச்சு கதைச்சார். நாங்களும் எப்படியாவது கூத்தாடத் தொடங்கெணும் எண்டு நினைச்சம். பிறகு ஏற்கனவே ஆடின கூத்தின் ஒரு பகுதியான 'அருச்சுனன் பெற்ற பாசுபதம்' என்ற கூத்த ஆட வெளிக்கிட்டம்.



ஆனால் நீண்ட நாளா கூத்தாடாம இருந்ததால அதத் திருப்பி எடுக்கிற கஷ்ரமாததான் இருந்தது. கூத்தாடினாக்கள் சிலரைத்தான் சேர்த்தெடுக்க முடிஞ்சிச்சு. அதிலதான் சிலபேர் மத்தளம் அடிக்கத் தொடங்கினாங்க. அண்ணனும் அடித்தான். ஆனால் பாத்திரங்கள் போதல்ல. அருச்சுனனுக்கு ஆடவே ஆளில்ல. அதில நான் பொம்பிளக் கூத்தாடினேன். மூன்று பாத்திரங்களுக்கு நடிச்சனான். வேடுவிச்சிக்கும் பேரண்டச்சிக்கும் இன்னொரு பாத்திரமொண்டுக்கும் நடிச்சன்.

நாங்க கூத்துப் பழகக்க எங்களோட சேரும் இருந்து கூத்தப் பாப்பார். ஒரு நாள் கூத்துப் பற்றி கதைச்சி கேள்விகள் கேட்டார். கூத்தில சில விடயங்கள் பொருத்தமில்லாது இருப்பதை சுட்டிக்காட்டினார். அப்பதான் கூத்தில சிலத மாத்தொணும் என்ற எண்ணம் எங்களுக்கு வந்தது. எண்டாலும் அப்ப ஆடிக் கொண்டிருந்த கூத்தில எந்த மாற்றத்தையும் செய்யாமதத்தான் ஆடி அரங்கேத்தினம். அதுக்குப்பிறகு, கூத்த நல்லா ஆடினா பாடினா மட்டும் போதாது அதில சொல்லப்படுற விஷியங்களையும் கவனிக்கொணும் என்று விளங்கி கூத்தை மாத்தியமைப்பமே என்று எல்லாரும் சேர்ந்தம்.

**❖ உங்களுக்கேயான ஒரு பாரம்பரியத்துடன் நீண்டகாலமாக கூத்தை ஆடிவந்த உங்களால் வெளியே இருந்து வந்து திடீரென கூத்தில் மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதான ஒருவரது கருத்தை எவ்வாறு ஏற்க முடிந்தது?**


சி. ஜெயசங்கர் - ஆய்வுச் செயற்பாட்டாளர்

கூத்தில மாற்றம் செய்யிறதெண்டுறது கூத்த கூத்தில்லாம செய்யிறதில்ல. கூத்திர அடிப்படையை மாத்தாம, அதேநேரம் கட்டாயம் மாத்தவேண்டிய கருத்துக்களை மாத்தி மீள உருவாக்கிறதுதான் அது. அதாலதான் கூத்து மீளுருவாக்கம் என்று சொல்றம் மற்றது, சேர் திடீரென வந்து எதையும் மாத்தச் சொல்லவோ இல்லாட்டி மாத்திக் கொண்டு தர ஆடவோ இல்ல. நாங்களும் அப்படிச் செய்யவுமில்லை நீண்ட நாளா எங்களோட சேர்ந்து கூத்துப் பழகி அவரும் ஆடினார். தொடர்ந்தும் எங்களோடவே இருந்தார். எங்கள மதிச்சார் நாங்களும் மதிப்புக் கொடுத்தம். எல்லாத்துக்கும் மேலாக கூத்தில அவசியம் மீளுருவாக்கம் செய்யவேண்டிய விஷயங்களைத்தான் அவரும் சொன்னார். நல்ல விடயங்கள சொல்றாரு என்று விளங்கினதாலதான் நாங்க எல்லாரும் சேர்ந்து கூத்தில வேல செய்தம்.

❖ **கூத்தில் என்னென்ன விடயங்களை மீளுருவாக்கம் செய்தீர்கள்?**



நம்ம வழமையா ஆடி வார கூத்தைப் பார்த்தா, அதில ஒருசில சாதியினர உயர்த்தியும் ஒரு சில சாதியினர குறைச்சும் பார்க்கிற நிலைமையிருக்கு. உதாரணமா கூத்தில வாற பறையர் பாத்திரத்த எடுத்துப்பாத்தா, குடிச்சி வெறிச்சித்து ஏதோ புலம்பிற இழிவான பாத்திரமாத்தான் சொல்லியிருக்காங்க. நாமளும் அதையே திரும்பத் திரும்ப ஆடிவந்திருக்கம். நாங்க எல்லாப் பாத்திரத்தையும் போல பறையர் பாத்திரத்தையும் கௌரவமான ஒன்றா மீளுருவாக்கினம்.

இதேபோல பெண்களை அடக்கி ஒடுக்கி அவங்கள ஒரு பொம்மையா நடத்திறது, அவங்கள பாலியல் பண்டமா சித்தரிக்கிறது, ஆண்கள் தங்கட விருப்பத்திற்கேற்ப நடத்திறதுதான் கூத்திலயும் இருக்கு. ஆம்பிளயலே கூத்துக்கள அதிகம் எழுதினது, பொம்பிளப் பாத்திரங்களைக்கூட அவங்களே ஆடி வந்ததால இப்பிடிச் செய்ய லேசா இருந்திருக்கு போல. நாங்க இப்பிடியான விஷயங்களை கதைச்சி விளங்கி பொருத்தமா மீளுருவாக்கினம். பொம்பிளப்பிள்ளையள், ஊராக்கள், அம்மாமார் எல்லோரும் வந்து கூத்துப் பழகக்க பாத்தாங்க, கதைச்சாங்க. பிறகு பொம்பிளப் பிள்ளையளே கூத்தாட வந்தாங்க. ஆரம்பத்தில் பொம்பிளப்பிள்ளையள் கூத்தாடினா அத இதக் கதைச்சி பழிச்சாக்கள் மெல்ல மெல்ல பேசாம போனாங்க. பெற்றார் தங்கட பிள்ளைகள கூத்தாட விட்டாங்க. ”

❖ **கூத்து மீளுருவாக்கத்தின் போது கூத்துக்களின் கருத்தியல்களில் கவனம் செலுத்தியதாக சொல்கிறீர்கள், இதே போல் வேறு ஏதாவது பகுதிகளில் கவனம் செலுத்தினீர்களா?**

கருத்தில மட்டும் நாங்க மாற்றம் செய்யல்ல, கூத்தில கனக்க விடயங்கள மீளுருவாக்கம் செய்திருக்கம். குறிப்பா சொல்லப்போனா பாரம்பரியக் கூத்தில் பாட்டுக்கள், விருத்தங்கள் எல்லாம் எல்லாருக்கும் விளங்கக் கூடிய வகையில இருக்கல்ல. ஆனால் நாங்க பாடமாக்கி அத படிச்சு ஆடி வந்திருக்கம். நாங்க இந்த விஷயங்கள மீளுரு வாக்கக்குள்ள கூத்த ஆடுறாக்களுக்கும் கூத்த பார்க்கிறாக்களுக்கும்



விளங்கி கொள்ளக் கூடிய வகையில பாட்டுக்கள எளிமையா மாத்தினம். ஏற்கனவே இருக்கிற பாட்டுக்கள்ர அர்த்தங்களையோ அமைப்பையோ மாத்தல்ல. ஏற்கனவே சொன்ன மாதிரி பிழையான கருத்துக்கள மட்டும் மீளுருவாக்கி பாட்டுக்கள்ர சந்தங்கள், அந்த தன்மைகள் குறையாம, வடிவு குறையாம ஆனால் எளிமையா அந்த பாட்டை மாத்தினம். தெளிவாயும் இனிமையாயும் பாடல்களை அமைச்சி உச்சரிப்பிலையும் கவனம் செலுத்தினம்.

இதே போலத்தான் ஆடுறத்த பாத்தமெண்டால் கூத்தை எல்லாரும் அழகா ஒரே மாதிரி ஆடுவாங்க என்று எதிர்பார்க்கேலா. நல்லா ஆடுவாங்க. சில ஆக்கள் கொஞ்சம் குறைவு. சிலருக்கு ஆட்டம் வராது. ஊரில கூத்தாடக்க நல்லா கூத்து பழகினாக்களும் ஆடுவாங்க, அப்பதான் கூத்துப் பழகிக்கொண்டிருக்கிறாக்களும் ஆடுவாங்க அதால அப்படித்தான் இருக்கும். ஆனால் நாங்கள் என்ன செய்தம் எண்டா எல்லாரும் சேர்ந்து ஆடுறத்துக்கெண்டே தனியா பயிற்சிகள் எடுத்தம். எல்லா ஆட்டங்களையும் எல்லாரும் ஒழுங்கா ஆடவேண்டும் அதனால எல்லாரும் ஆடி பயிற்சி செய்தம். ஆட்டம் தெரிஞ்ச ஒரு ஆள், ஆட்டம்

வராத ஆளுக்கு சொல்லிக் கொடுக்கிறது, பாட்டுப் படிக்க தெரியாதாள் பாட்டுப் படிக்க தெரிஞ்ச ஆக்களிட்ட கேட்டு பழகுறது போன்ற பயிற்சிகள

செய்தம். சேர், நாங்க, அண்ணாவியார் எல்லாரும் சோந்து இப்படி ஆடி பயிற்சி எடுத்து வரக்குள்ள சின்னாக்கள், பெரியாக்கள் எல்லாரும் நல்லா ஆடினாங்க. உதாரணமாச் சொன்னா கொலுவுல ஆடக்குள்ள (பாத்திரங்கள் பல ஒன்றாய்ச் சேர்ந்து குறித்த ஒரு வகையான தாளத்துக்கு ஆடுதல்) எல்லாரும் தாளத்துக்கு கால வைக்கிறது, ஒரே மாதிரி ஆடுறது, பாட்டு படிக்கிறது என்று நாங்க ஆடுறத்தில எல்லாம் ஒரு நேர்த்தியான தன்மையை கொண்டு வந்தம்.

கூத்தில இருக்கிற உடுப்புக்கள பார்த்தா, வித்தியாசமான கிரீடங்களும். பளபளப்பான உடுப்புக்களுமாத்தான் இருக்கு. அதால செலவும் கூடத்தான், அதே நேரத்தில இண்டைக்குரிய வகையில ஒரு இயல்பாயும் எளிமையாயும் இருக்குமெண்டு சொல்லி நாங்க எதிர்பார்க்கேலாது. உண்மையில இவையெல்லாம் பாரம்பரிய கூத்துக்குள்ள இடையில வந்து சேர்ந்வைகள் தான் நாங்க மீளுருவாகக்குள்ள பாத்திரத்திற்கு பொருத்தமானதும் அதே நேரத்தில ஆடுற பாடுறத்துக்கு லேசா இருக்கக் கூடிய வகையிலும் எளிமையான உடை ஒப்பனைகளை செஞ்சம்.

இதேமாதிரி, ஆடுற பாடுற மட்டும் தான் கூத்து, அதில நடிப்பில்லை என்று கதைக்கிற நிலைமை இருக்கு. உண்மையில ஆடுற பாடுறதுதான் கூத்திட நடிப்பில முக்கியம்.பெயர் பெற்ற கூத்துக்காராக்கள் நல்ல நடிகர்களாகவே இருந்திருக் காங்க எங்கட அப்பா பொம்புள நடிப்பில கெட்டிக்காரார்.



நாங்க ஆடுற பாடுறத்துக் குள்ளேயே வடிவா பாத்திரத்தி ற்கு ஏற்ப குரலால, உடலால, முகபாவங்களால அபிநயிச்சி

நடிக்கிற அம்சங்கள கொண்டு வாறத்துல கவனம் செலுத் தினம். ஆனால் உடனே எல்லா விஷயங்க ளையும் எங்களால சிறப்பா கொண்டுவர முடியல்ல. கூத்தைப் பழகிப் பழகி, மாத்தி மாத்தி செய்து வரக்குள்ள தான் இந்த விஷயங்களை எல்லாம் சிறப்பாச் செய்ய முடிந்தது.

**❖ இதுவரை நீங்கள் மீளுருவாக்கியுள்ள கூத்துக்கள் பற்றி சொல்லுங்கள்?**

சேர், வந்து அவர்ர றிசேச்சுக்காக (Research) எங்களோட வேலை செய்யத் தொடங்கினது 2002ல். 2004ற்குள் அவர்ர வேலை முடிஞ்சித்து. அதில நாங்க ஊரில ஆடின 'தர்ம புத்திரன்' கூத்தத்தான் மீளுருவாக்கம் செய்தம். அதை மீளுருவாக்கி வந்த கூத்துத்தான் "சிம்மாசனப் போர்'.

தர்மபுத்திரன் கூத்து என்று சொன்னா, அதின்ர கதை என்ன? தர்மத்திற்கும் அதர்மத்திற்குமான சண்டை தான். தர்மர் (பாண்டவர்கள்) பக்கம் தான் நேர்மை, நியாயம். துரியோதனன்ரபக்கம் (கௌரவர்) நேர்மை இல்ல அதனால துரியோதனனாக்கள் சாகிறாங்க, தர்மராக்கள் வெல்லுறாங்க. இதுக்காகத்தான் இந்த கூத்துக்கு தர்மபுத்திரன் என்ற பேர் வைச்சிருக்காங்க போல.



ஆனால் அந்த சண்டையில வந்து உண்மையா துரியோதனன் பக்கமும் நியாயம் இருக்குத்தானே. அந்த சண்டையைப் பார்த்தா அது ஒரு சிம்மாசனத்துக்காகத்தானே நடந்திருக்கு. இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் ஆராஞ்சி மீளுரு வாக்கினது தான் சிம்மாசனப் போர் என்ற கூத்து. இந்த கூத்தோட றிசேச் வேலை முடிஞ்சித்து எண்டாலும் தொடர்ந்து சேர் நாங்க எல்லாரும் சேர்ந்து வேலை செய்தம். ஒவ்வொரு வருஷமும்

ஆடுற கூத்துக்கள மீளுருவாக்கித்தான் ஆடினம். அந்த வகையில இரண்டாவதாக ‘இராம இராவண யுத்தம்’ என்ற கூத்தை “சீதை சூர்ப்பனகை வதை” என்ற கூத்தா மீளுருவாக்கினம். இராமாயணக் கதைதான் இராம இராவண யுத்தத்தில இருக்கு. இங்க பாத்த மெண்டா இராமனும் இராவணனும் சண்டை பிடிக்கிறதும், ஒரு ஆளை ஒரு ஆள் வீழ்த்திறதும் அவங்கட வீரமும் தான் சொல்லப்பட்டிருக்கு. ஆனால் இந்தச் சண்டைக்குள்ள மாட்டுப்பட்டு சீதை, சூர்ப்பனகை, மண்டோதரி போன்ற பெண்கள் பட்ட கஷ்டங்களை யாரும் கவனிக்கல்ல. ஆம்பிளைகளிற நோக்கில கூத்து எழுதப்பட்டிருக்கிறதால இப்பிடி கவனிக்கப்படாம விடப்பட்டிருக்கு. உண்மையிலேயே சீதையும் சூர்ப்பனகையும் பட்ட அவஸ்தைகள் தான் இந்தக் கூத்துல அதிகமா இருக்கு. இதை விளங்கினதால்தான் பெண்ணிலை நோக்கில் இந்தக் கூத்தை நாங்க “சீதை சூர்ப்பனகை வதை” என்று மீளுருவாக்கம் செய்தம்.

அடுத்ததா “அபிமன்யு இலக்கணன் வதம்” என்ற கூத்தை மீளுருவாக்கினம். நாம பொதுவா மகாபாரதக்கதையைப் பார்த்தமெண்டா ஆள்மாறி ஆள்மாறி எல்லா இடத்திலயும் சண்டைதான் முக்கியமாக இருக்கும். அண்ணன் மாரும், தம்பிமாரும் அதிகாரத்திற்காக ஆள ஆள் சாகடிச்சதுதான் மிச்சம். ஆனால் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையில சண்டை என்று சொல்லப்பட்டிருக்கு. இதில் சின்னாக்கள் எத்தினை பேர் சும்மா செத்திருக்காங்க. பாண்டவர்கள்ர, கௌரவர்கள்ர பிள்ளைகள், அவங்கட (பெரியவர்கள்) நலத்திற்காக பகடைக்காய்களாக சாகடிக்கப்பட்டி ருக்காங்க. உதாரணமாப் பாத்தா, பாண்டவர்கள்ர பக்கம் அபிமன்யு மற்றும் பாண்வர்களுக்கும் துரௌபதைக்கும் பிறந்த ஐந்து சிறு பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள். கௌரவர் பக்கம் இலக்கணன், கர்ணனின் இளம் பாலகன் முதலியோர் கொல்லப்பட்டனர். இப்பிடி சிறுவர்கள, பெரியவர்கள் பகடைக் காய்களாய் பலிக் கடாவாக்கும் நிலமைகளை ஆராய்ந்து உருவாக்கினதுதான் இந்த அபிமன்யு இலக்கணன் வதை என்ற கூத்து.

அடுத்ததா நாங்க ‘அல்லி நாடகம்’’ என்னும் தென்மோடிக் கூத்தை வடமோடிக்கூத்தா மாத்தி அதை பெண்ணிலை நோக்கில் மீளுருவாக்

கினம். அல்லிக் கூத்து பிரபலமான கூத்து. மகாபாரதத்தின் கிளைக்கதை தான் அல்லியின்ர கதை. தன்ர ஆளுமையால் தன் நாட்டை எதிர்த்த பகைவரை பணிய வைத்து நாட்டு வளம் சிறக்க நல்லாட்சி செய்த பெண்ணரசியான அல்லி ராணியை அர்ச்சுனனும், கிருஷ்ணரும் தந்திரத்தால் தோற்கடித்ததுதான் இக் கூத்தின் கதை. அர்ச்சுனன் அல்லி மேல் காதல் கொள்கிறான். ஆனால் அவளிடம் நேரில் சென்று விருப்பம் கேட்கப்பயந்து மாறுவேஷம் பூண்டு அவள் அரண்மனை சென்று அவள் நித்திரையில் இருக்கும் போது அவள்ர கழுத்தில் தாலி கட்டி விடுகிறான். கண்விழித்த அல்லி தன் கழுத்தில் தாலி இருப்பதை கண்டு அதிர்ச்சியுற கணவன் நான் தான் என்று முனிவேஷத்திலிருந்த அர்ச்சுனன் தன் சுயரூபத்தை காட்டி சொல்கிறான். அல்லியை மனைவி என்ற பேரில் பணிய வைத்து தன் அடிமையாக அரண்மனைக்கு கொண்டு செல்கிறான்.

இப்படித்தான் அல்லி பற்றிய எல்லாக் கதைகளிலும் இருக்கு. ஆண்கள் தங்கட அதிகாரத்தால பெண்கள அடக்கியுள்ள நிலமையை விளங்கி நாங்க, அல்லிக் கூத்தின் கதையை மீளுருவாக்கம் செய்தம். அல்லி, நீ நித்திரையில் என்னோடு உறவு கொண்டாய், நான் உனக்குத் தாலி கட்டிய கணவன்! நீ என் மனைவி, நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும்! என்கின்ற அர்ச்சுனனிடம் பணிந்து போகும் அல்லியாக இல்லாமல் அவனை எதிர்த்து கேள்விகள் கேட்கின்ற, தனது உரிமையை பேசுகின்ற அல்லியாக மீளுருவாக்கினம். என்னோட விருப்பம் என்றால் நேரில வராம மாறு வேஷத்தில ஏன் வந்தாய்? நித்திரையில புணர்ந்திட செத்தோ நான் கிடந்தேன்? இது வெறும் கட்டுக்கதை, இதை நான் சும்மா விடமாட்டேன், என் கேள்விகளுக்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும், எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும். இப்படி துணிந்து எதிர் வாதங்களை செய்து தன் நியாயங்களுக்காகப் போராடுகின்ற பெண்ணாக அல்லியை மீளுரு வாக்கினம். இதாலதான் இந்த கூத்தை அல்லிக்கூத்து என்று சொல்லாம "அல்லியின் எதிர்வாதம்" என்று சொல்றம். ஊர்ல இருக்கிற ஆண்கள் பெண்கள் எனப் பலபேர் சேர்ந்து கலந்துரையாடித்தான் இந்தக் கூத்தை உருவாக்கினம்.

இந்தக் கூத்தின்ர முடிவை, தனக்கு அநியாயம் நேர்ந்திட்டுது, இதற்கு என்ன செய்யலாமென்று அல்லி உரையாடுவதாக உருவாக்கினம். கூத்து பார்த்த கனபேர் தங்கட கருத்துக்களை சொன்னாங்க, விவாதிச்சாங்க. சுருக்கமாகச் சொன்னா இந்தக் கூத்திர முடிவு ஒரு விவாத அரங்காக (Forum Theatre) அமையிறதப் பார்க்கலாம்.

பாரம்பரியமா கூத்துக்களில் வாற பறையர் பாத்திரம் குடிச்சி வெறிச்சித்து புலம்பித்துப் போற பாத்திரமா இல்லாம பறையறைந்து விவாதத்தை நடத்திச் செல்ற பாத்திரமா மீளுருவாக்கப் பட்டிருக்கிறது இக்கூத்தில இன்னொரு முக்கிய அம்சமாகும்.



இறுதியாக நாங்கள் மீளுருவாக்கின கூத்து "சுபத்திரை கல்யாணம்". இந்தக் கூத்து மகாபாரதக் கதையின் ஒரு சின்னப் பகுதி. இந்த கூத்து மீளுருவாக்கத்தில் இரண்டு விஷங் களை முக்கியமா சொல்லொணும். முதலாவதா, இந்தக் கூத்துல சொல் லப்படுற கதையை பார்த்த மெண்டா ஒரு பெண் தான் விரும்புற ஒருவரை திருமணம் செய்ய வேண்டும் என்பதக் காக தனக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடெல்லாத்தையும் மீறி துணிந்து போராடி வெற்றி பெறுவதை இது காட்டுது. சுபத்திரைக்கு இரண்டு அண்ணன்மார் ஒருவர் கிருஷ்ணர் மற்றவர் பலராமர் கிருஷ்ணருக்கு விருப்பம் தனது நண்பனான அர்ச்சுனனைத்தான் சுபத்திரைக்கு கலியாணம் செய்து வைக் கோணுமெண்டு ஆனால் பலராமருக்கு விருப்பம் துரியோதன னுக்கு கலியாணம் செய்து வைக் கோணுமெண்டு. உண்மையில சுபத்திரைக்கு அர்ச்சுனன் மேல்தான் விருப்பம். இப்படி இருக்கக்குள்ள பலராமரால தான் எதிர் கொள்ற எதிர்ப்புக்கள் எல்லாத்தையும் துணிந்து எதிர்கொண்டு சுபத்திரை, அர்ச்சுனனை தேரில் ஏற்றிக்கொண்டு தானே தேரோட்டி

வெற்றி பெறுகிற மாதிரி இந்த கூத்து அமைஞ்சு இருக்கு. ஆடல். பாடல், தாளக்கட்டு, விருத்தம் எல்லாம் இத்துணிவைக் காட்டக்கூடிய தன்மையோட உருவாக்கப் பட்டிருப்பது இந்தக் கூத்தின்ர சிறப்பு.

இரண்டாவது முக்கியமான அம்சம் என்னவென்று சொன்னா, இதுவரை மீளுருவாக்கின கூத்துக்களிற்கான பாடல், தாளக்கட்டு, விருத்தங்களை எழுதினது ஏற்கனவே கூத்துக்கள் எழுதி அனுபவம் பெற்ற சிவநாயகம் அண்ணன், ஆனால் இந்த கூத்தை எழுதினது நாங்க செய்த மீளுருவாக்கச் செயற்பாட்டுக்குள்ள இருந்து வந்த இரண்டு இளம் பொம்பிளப் பிள்ளையள். கருவேப்பங்கேணியைச் சேர்ந்த தனுஜா, நிறோஜா என்கின்ற இரண்டு பிள்ளைகளும் தாங்க பெற்ற பயிற்சிகள், அறிந்த விஷயங்கள், விளங்கினதுகள வைச்சிக்கொண்டு இந்த கூத்த முழுமையா எழுதினாங்க. மத்த ஆக்கள் சப்போட் (support) பண்ணினாலும் அவங்கட உழைப்புத் தான் அதிகம். பொம்பிளப் பிள்ளையள் கூத்தாடுறத விரும்பாத. கூத்தாடினாப் பழிக்கிற, இழிவாகப் பார்க்கிற இந்த பொதுவான சூழலில கூத்தாடினது மட்டுமல்லாம ஒரு கூத்தை எழுதுற ஆக்களா உருவாக்கப் பெற்றிருக்கிறதுதான் இந்தக் கூத்து மீளுருவாக்கத்தின் சிறப்பு.

**10. கூத்தின் விடயங்களை ஆராய்ந்து மீளுருவாக்கிட நீங்கள் பின்பற்றிய முறைமை பற்றி விளக்கமாகக் கூறுங்கள் ?**

இது பல்வேறு நிலைகளில பல்வேறுபட்ட முறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஒன்று. காலங்காலமாக ஆடப்பட்டுவாற கூத்துக்களிற கருப்பொருளா இருக்கிற புராண இதிகாசக் கதைகள் அவைகளோட சம்பந்தப்பட்ட சிறு சிறு கிளைக்கதைகளுக்குள்ள கட்டமைக்கப்பட்டிருக்கிற பிற்போக்கான ஆதிக்கக் கருத்துக்களை அடையாளங்கண்டு அவற்றை ஆக்கபூர்வமாகவும் அதேவேளை கூத்துக்குரிய விதத்திலும் மீளுருவாக்கிறதே எங்கட நோக்கமாயிருந்திச்சி. பாரம்பரியமா ஆடிவந்த கூத்துக்கதைகளை (எழுத்துருக்கள் (Scripts)) மீளுருவாக்கிறதுக்காக நாங்க கூத்துபழகிற இடங்களிலேயே சிலசில கலந்துரையாடல்களை, களப்பயிற்சிகளை நடத்தினம். ஊருக்குள்ள இருந்து உள்நாட்டில, வெளிநாடுகளில இருந்து

வந்த நாடகக்காரர்கள் இலக்கியக் காரர்களோட கலந்துரையாடல்கள் நடந்திச்சு. பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்களோட தொடர்ச்சியா நடந்த சந்திப்புக்கள், களப்பயிற்சிகள் முக்கியமான விடயங்களை எங்களுக்கு உணர்த்திச்சு.

இதேபோல மகாபாரதம், இராமாயணம் தொடர்பா வந்துள்ள பலதரப்பட்ட இலக்கியங்கள, எழுத்துகள வாசித்தது உரையாடினது மகாபாரதம், இராமாயணம் சம்மந்தமான புதுப்புது நாடகங்கள, சினிமாப் படங்கள பார்த்தது. உதாரணமா, பீற்றர் புரூக்கிற (Peeter Brook) மகாபாரதம், கர்ணன் படம், இந்தியகூத்துக்கள பார்த்தத சொல்லலாம். இவைகள் கூத்துக்களிற கருத்துகள விளங்க உதவிச்சு.

இன்னொரு முக்கியமான விஷயம், உரையாடல் அரங்கச் (Forum Theatre) செயற்பாடுகள் நடாத்தப்பட்டமை. உதாரணமா ஒரு சம்பவத்த சொல்லலாம். வழமைபோல இரவு எட்டு மணியளவிருக்கும் ஆத்தங்கரை தென்னந்தோப்புக்க நாங்க 1990ம் ஆண்டு ஆடின தருமபுத்திரன் கூத்தினை ஆடிக்கொண்டிருந்தம். துரோபதியை துயிலுரிகிற காட்சி ஆடப்படக்க அந்தக்காட்சியை சேர் திடீரென அப்படியே நிறுத்தும்படி சொல்லி, காட்சியை பார்த்துக்கொண்டிருந்தாக்களிட்ட “இதில் உங்களில் யாராவது ஒருவராக துரோபதை இருந்தால் என்ன செய்வீர்களென்று செய்துகாட்ட முடியுமா?” என்று கேட்டார். ஆண்கள் பெண்கள், இளமாக்கள் என பலதரப்பட்ட ஆக்கள் தங்கள்ற கருத்துக்களைச் சொன்னாங்க, நிகழ்த்திக் காட்டினாங்க. அதில பலதரப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. உரையாடினம், விவாதிச்சம், விளங்கிக்கொண்டம்.

இப்படி தொடர்ச்சியா பலபல வழிகளில் இடம்பெற்ற செயற்பாடுகளில கூத்தில் சம்பந்தப்பட்ட பலரும் கலந்து கொண்டதால குறிப்பாக, ஏட்டண்ணாவியார், அண்ணாவியார் உட்பட மூத்த கூத்துக்காரர்கள் பலரும் பங்கு கொண்டதால புதுப்புது விடயங்களை அறிந்துகொள்றதற்கும் வழமையா ஆடிவந்த கூத்துக்களிற கருத்துக்களையும் அவைகள் அமைந்த விதத்தை விளங்கிகொள்ளவும் முடிந்தது. இவைகளாலதான் கூத்துக்களிற கருத்துக்களை பொருத்தமா மீளுருவாக்க முடிந்திச்சு.

சேர், ஏட்டண்ணாவியார், அண்ணாவியார், நான், கௌரீசன் உட்பட பல கூத்துக்காரர்களும் கூடியிருந்து பாரம்பரியக் கூத்துக்கள (Scripts) வாசிச்சு, பாடல்கள் விருத்தங்களைப்பாடி படிப்படியா பொருத்தமா மீளுருவாக்கினம். இது இப்படிவரும், அது அப்படித்தான் வரும் என்று விடயங்களை உரையாடுறதுக்கேற்ப ஏட்டண்ணாவியர் சிவநாயகம் அண்ணன் மாற்றங்களைச் செய்து கொள்வார். பிறகு அத வைச்சுக்கொண்டு எல்லோரும் கூடியிருந்து உரையாடுவம். பிறகும் மீளுருவாக்கம் செய்ய வேண்டியிருக்கும். நிச்சயமா அது ஒரு மூன்று நான்கு தடவைகளுக்கு மேல தொடர்ந்து நடக்கும்.

தர்மபுத்திரன் கூத்த மீளுருவாக்கிறப்ப மகாபாரத மூலக்கதையிர முக்கியமான பகுதி ஒன்று திரிவுபடுத்தபட்டிருக்கிறத நாங்க விளங்கிக்கொண்டதையும் அதை பொருத்தமா நாங்க மீளுருவாக்கின "சிம்மாசனப்போர்" கூத்தில சேர்த்துக்கொண்டுள்ளதையும் இங்க உதாரணமாச் சொல்லலாம்.

துரோபதியை அந்தப்புரத்திலிருந்து அரச சபைக்கு அழைத்துவாரத்துக்கு துரியோதனன் தன்ட தேர்ப்பாகனான பிரதிகாமியினை அனுப்புறபோது பிரதிகாமி மன்னனின் கட்டளையை துரோபதியிடம் கூறுகிறான். அப்ப துரோபதி கோபத்தோட பிரதிகாமியிடம் "தருமன் தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றானா, இல்லை என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றானா?" என்று கேட்டுவரும்படி சொல்ற சம்பவம் மூலக்கதையில இருக்கிறபோதும் அது கூத்துக்களில சேர்த்துக்கொள்ளப்படல்ல.

ஏற்கனவே தர்மபுத்திரன் கூத்திலவந்த, ஏதும் அறியாத கணவனே கண்கண்ட தெய்வம் என்று கணவன் வழி செல்லும் பெண்ணாக இருந்த துரோபதி தனது கணவன் எண்டாலும் செய்தது நியாயமானதா? ஏன்பதை துணிவுடன் தட்டிக்கேக்கின்ற ஆளுமை நிறைந்த பெண்ணாக மீளுருவாக்கப்பட்ட சிம்மாசனப்போர் கூத்தில் படைக்கப்பட்டமை முக்கியமானது.

சிலவேளைகளில, நாங்க கூத்த மீளுருவாக்கி பாடி ஆடிப் பழகிக் கொண்டிருக்க கூட சில விஷயங்கள மீளுருவாக்கம் செய்யவேண்டி

வரும். ஏனென்டா கூத்துக் கொப்பியில(Script) கூத்த நடிக்கிற சம்பந்தமான எல்லா விடயங்களும் இருக்கிறல்ல. அது ஆடிப்பாடி பழகக்கதான் விளங்கும். சிலத அண்ணாவியார்தான் தெரிஞ்சி வைச்சிருப்பார். இதுகள வைச்சிக்கொண்டு பார்க்கக்க கூத்துக்களின் கருத்துக்கள மீளுருவாக்கின வேலை பல பல முறைகளில நடந்ததொன்றாகவே தெரியுது.

❖ **கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை உங்களது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் விளங்கிக் கொண்டுள்ளார்களா? அவர்களது ஆதரவு (Support) அங்கீகாரம் (Response) எவ்வாறுள்ளது?**

ஊர் எண்டு சொன்னாலே பலதரப்பட்ட ஆக்கள் இருப்பாங்க. சிலாக்கள் விளங்கிக் கொள்ளக் கூடியவங்களா இருப்பாங்க, இத விளங்கித்தும் விளங்காத மாதிரித் திரியிறாக்கள் இருப்பாங்க. சிலர் விளங்காட்டியும் சப்போட் (Support) பண்ணிறவங்களா இருப்பாங்க சிலர் குழப்பிறவங்களாவும் இருப்பாங்க. மற்றது, கூத்தாடுற சமூகத்தில இருந்தாலும் எல்லாரும் கூத்தாட மாட்டாங்கதானே. ஒவ்வொரு ஆக்களும் ஒவ்வொரு கடமையைச் செய்யக்கூடியவர்களாகத்தான் இருக்காங்க அதனால் எதிர்ப்பு வாறத்துக்கு சந்தர்ப்பம் குறைவாத்தான் இருக்கு. நாங்க இதுவரை செய்தமீளுருவாக்கச் செயற்பாடுகளை விளங்கி அதுக்கு ஆதரவு வழங்கிறவங்களாகத்தான் கூடுதலான ஆக்கள் இருந்தாங்க. கூத்தில நாங்க இந்த வேலையை சேராக்களோட தொடங்கக்குள்ள சிலர் இதை விரும்பவில்லை. சிலருக்கு இது விளங்கவுமில்லை. ஊரில ஆரம்பத்தில எங்களோட கூத்தாடி வந்த சிலர் இதில இருந்து ஒதுங்கி கொண்டாங்க. சிலர் அத இதக் கதைச்சாங்க. ஆனால் படிப்படியா



வேலை செய்து வரக்குள்ள இது ஒரு முக்கியமான விஷயம், நாங்க இதக் கட்டாயம் செய்யொணும் என்றதை அவங்க விளங்கிக் கொண்டாங்க. ஏனெண்டா, கூத்தில ஆடுற பாடுற மட்டுமில்ல கூத்துக்குள்ளால நடைமுறைச் சூழல விளங்கிக் கொள்றம். நாம ஒன்றாச் சேர்ந்து கொள்றம். ஏற்கனவே உங்களிட்ட கதைச்சமாதிரி ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், பெரியவர்கள் எல்லாரும் சேர்ந்து கருத்து ரீதியாக இருந்த பிரச்சினைகளை கதைச்சு விளங்கி மாத்தினது. அந்தப் பிரச்சனைகளில் இருந்து எப்படி விடுபடுகிறது என்றது பற்றி உரையாடினது, பயிற்சிகள் செய்தது இதுகளாலதான் இது ஒரு முக்கியமான விஷயம் என்றதை எல்லாரும் விளங்கிக் கொண்டாங்க.

சின்னாக்கள்ர படிப்பில பெரியாக்கள் அக்கறை காட்டிறது, பெரியாக்கள்ர சொல் கேட்டு சின்னாக்கள் நடக்கிறது இப்பிடியான தொடர்பையெல்லாம் இந்தக் கூத்து மீளுருவாக்கச் செயற்பாடு கொடுத்ததால எல்லார்ற ஆதரவும் கிடைக்கத் தொடங்கிச்சு.

மற்றது எங்கட ஊர்ல நடக்கிற வைரவர் சடங்கை ஒட்டித்தான் நாங்க கூத்து ஆடுறது. சடங்கெண்டா ஊராக்கள் எல்லாரும் சேர்ந்திருப்பாங்க. அதால கூத்திலயும் விருப்பமாயிருந்தாங்க. ஒவ்வொரு சடங்கிலயும் கூத்தாடணும்; இவங்களகூத்தாட வைக்கணும் என்று சொல்லி எல்லாரும் ஒருமிச்சு நிண்டதாலதான் சடங்க ஒட்டி கோயில்ல கூத்தாடுறது நடந்து வருகிது. நாங்களும் தொடர்ச்சியா கூத்தப் பழகி ஆடிவாறம்.
இதேபோல வெவ்வேற இடங்களுக்கு அந்தந்த ஊராக்கள்ர அழைப்பின் பேரில கூத்தாடப் போகக்குள்ள கூத்தாடுற பிள்ளைகள்ர அம்மா, அப்பா சொந்தக்காரர்களும் கூடவே வாறது, கூத்தாடுறதில ஆர்வமில்லாட்டியும் தன்ர பிள்ள ஆடுது பாடுது பழகுது என்று பக்கத்திலிருந்து பார்க்கிறது, அரங்கேற்றம் செய்யக்குள்ள களரியில ஏறி மாலைபோட்டு, சால்வை கட்டி, காசு கொடுத்து கௌரவிக்கிறது, வேற வேற உதவிகளச் செய்யிறது என்று ஊரெல்லாம் சேர்ந்த ஒரு செயற்பாடா இந்தக் கூத்துவேலை இருக்கிறதால இதற்கு எல்லாரும் மதிப்பு கொடுத்தாங்க. ஒத்துழைச்சாங்க. இப்பவும் கொடுத்துத்தான் வாறாங்க.

**❖ சீலாமுனையினை மையப்படுத்தி இடம்பெற்றுள்ள இக்கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில் சீலாமுனைக் கிராமத்தைச் சாராத வேற யாராவது பங்கெடுத்து ள்ளார்களா?**



நிறையப்பேர் ஈடுபட்டிருக்கிறாங்க. ஆரம்பத்தில சேர்தான் எங்களோட வந்து சோந்தார். மெல்ல மெல்ல அவரை இணைப்பாளராகக் கொண்டு இயங்கிற மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவைச் சோந்த வர்களும் வந்தாங்க. இந்தக் குழுவில் கருவேப்பங்கேணி, தாமரைக்கேணி, கல்லடி, நாவற்குடா, மட்டிக்களி என்று பல ஊரைச் சேர்ந்த பிள்ளைகள் இருக்கிறாங்க எல்லாரும் வந்து சேர்ந்தாங்க. சீலாமுனைக் கலைக்கழகத்தைச் சேர்ந்த நாங்களும் இவங்களும் சேர்ந்துதான் வேலையைத் தொடங்கினம்.

இதேபோல, சேர் கெம்பஸில (கிழக்குப் பல்கலைக்கழகம்) லெக்சரரா (Lecturer) இருக்கிறதால அவரிட்ட படிக்கிறாக்கள், தொடர்புபட்டாக்கள் சிலரும் வந்தாங்க கூத்துப்பழகினாங்க. இந்த இடத்தில முக்கியமான விஷயம் ஒண்டச் சொல்லொனும், கெம்பஸில சேரிடம் நாடகத்தையோ, கூத்தையோ படியாத வேற துறையைச் (Faculty)சேர்ந்த இரண்டு பொம்பிளப் பிள்ளைகள் (ரஜிவினி, லவினி - விஞ்ஞான பீடம்) எங்களிட்ட வந்து கூத்துப் பழகி அரங்கேற்றத்தில ஆடியமை. இந்த இரண்டு இளம் பொம்பிளப் பிள்ளையலும் ஆடுறதைப் பார்த்துத்தான் ஊரில இருக்கிற பொம்பிளப் பிள்ளைகள் விரும்பி ஆட வந்தாங்க. இண்டைக்கும் கெம்பஸில, பள்ளியில படிக்கிற பிள்ளைகள் வந்து கொண்டுதான் இருக்காங்க.

இதே மாதிரி சேர், வேறஇடங்களில இருந்து படிச்சவங்கள் பலபேரை கூட்டி வந்தார். வெளிநாடுகளிலிருந்து வெள்ளைக்காரார்கள் வந்தாங்க, வேற கெம்பஸ்களில இருந்து லெக்சர் மார் வேக்சொப் (Workshop) செஞ்சாங்க. எங்களோட உரையாடினாங்க, Prof.Jems Thomsan

(University of mensester Londan) என்ற வெள்ளைக்காரர் எங்களுக்கு பிரயோக அரங்கு (Applied Theatre) சம்பந்தமான வேக்சொப் வைத்தார்.

இதேபோல மட்டக்களப்பில வேற வேற ஊர்களிலிருந்து, அண்ணாவிமார், கூத்தாடுறவங்கள் பலபேர் வந்தாங்க. கன்னங்குடா, களுவங்கேணி, சித்தாண்டி, களுதாவளையிலிருந்து கூத்தாட்டக்காரர்கள் வந்தார்கள். இப்படிப் பலபேர்வந்தாங்க, சேர்ந்து உரையாடினம் விவாதிச்சம் கூத்துப் பழகினம்.

எண்டாலும் சீலாமுனைக் கழகத்தைச் சேர்ந்தாக்களும், மூன்றாவதுகண் குழுவைச் சேர்ந்தவர்களும்தான் முழுமையா இந்த வேலையில ஈடுபட்டோர் இன்றுவரை ஈடுபட்டு வாறோம். மத்தாக்களும் சின்ன சின்ன ஆதரவுகள வழங்கிக் கொண்டுதான் இருக்கிறாங்க.

**❖ கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில் உங்களது பங்களிப்பு எவ்வாறமைந்துள்ளது?**

கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில நாங்க எல்லாரும் சேர்ந்துதான் வேலை செய்தது. எல்லாரும் எல்லா வேலைகளையும் செய்யிற வங்களாத்தான் இருந்தாங்க, இருக்காங்க. கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில ஆரம்பத்தில் நான் எனக்குத் தாற பாத்திரத்துக்கான பாட்டுக்களைப் பாடுறது ஆடுறது அப்பிடியான வேலைகளைத்தான் செய்து கொண்டிருந்தன். ஆனால் பிறகு சின்னாக்கள் பெரியாக்கள் எல்லாரும் சேர்ந்து தொடர்ச்சியா ஈடுபட்டுவார நேரத்தில, சேரும் கதைச்சதுகளுக்கு இணங்க மற்றவங்களுக்கு ஆட்டங்கள பழக்கிறது, பாட்டுக்கள் சொல்லிக் கொடுக்கிறது அப்படியான வேலைகளைச் செய்தன்.

இதேபோல, கூத்தில இருக்கிற விசயங்கள விளங்கி அதற்கான பாடல், விருத்தம் என்பவற்றை எளிமையா பொருத்தமா இனிமையா எழுதுற வேலையை, மீளுருவாக்கிற வேலைகள எல்லாரும் சேர்ந்துதான் செய்தம். நானும் சில சம்பவங்கள விளங்கப்படுத்தியிருக்கன்.

உதாரணமாச் சொன்னா, கூத்துமீளுருவாக்கத்திற்கான ஆய்வுச் செயற்பாட்டின் தொடக்கத்தில் சாதிரீதியான ஏற்றத்தாழ்வு சம்பந்தமாக உரையாடக்க, மகாபாரதக் கதையில துரோபதியை சபையில வைத்து பந்தயத்தில் தோற்ற பொருளாகப் பார்கிறதுக்கும் அவளிற துயிலை உரியிரதுக்கும் கர்ணனே காரணமாக இருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறதை உரையாடலுக்கு கொண்டுவந்தன்.

அதாவது கர்ணன் தேரோட்டியின் மகன் தாழ்த்தப்பட்டவன் அதனாலேயே அவன காரணமாக சொல்லியிருக்காங்க. உண்மையில மகாபாரதக்கதையின்படி கௌரவர்களின் அழிவுக்கு காரணமான முக்கிய இடமாக சொல்லப்பட்டிருகின்ற துரோபதையின் துயிலுரிப்பு சம்பவம் நடக்கிறத்துக்கு காரணமானவன் தாழ்த்தப்பட்ட குலத்தவனான கர்ணனேதான் என்ற செய்தி நாசூக்காக மூலக்கதையில சொல்லப்பட்டிருக்கு.

உயர்சாதிக்காரர்கள் என்றிராக்கள் நம்மிடையே சொல்லிவருற "கீழ்சாதிக் காரன் தன்ட கீழ்சாதிக் குணத்தைக் காட்டிவிட்டான்" என்ற கதையை மகாபாரதக்கதையில மறைமுகமாக சொல்லியிருக்கிறத உரையாடலுக்கு கொண்டுவந்தன். இதை எல்லாரும் பாராட்டினதும் முக்கியமான விஷயமாக எடுத்து உரையாடினதும் எனக்கு சந்தோசத்தை தந்திச்சு.

இதே மாதிரி கூத்து பழக்கக்க எல்லாரும் நேரத்துக்கு வாறது, சேர்ந்து பழகிறது, உரையாடுறது இப்படியான வேலைகள் ஒழுங்கா நடக்கிறதுக்கு ஏற்றமாதிரி ஒழுங்குகள் செய்து அதைக் கவனித்து வந்தன்.

❖ **உங்களது சமூகத்தின் ஏனைய நடைமுறைச் செயற்பாடுகளிற்கும் இக் கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளிற்கும் இடையில் உள்ள உறவு எத்தகையது?**

எங்கட ஊரைப் பொறுத்த வரையில் கூத்தாடுறது கூட ஒரு நடைமுறைச் செயற்பாடு மாதிரித்தான். வேலைக்குப்போற, விளையாடுற, சடங்கு செய்யிற மாதிரி கூத்தாடுறதும் ஒண்டு. எல்லாம் ஒன்றோடொன்று கலந்துதான் காணப்படுது.

ஆனால் கூத்து மீளுருவாக்கச் செயற்பாடு தொடங்கினதுக்குப் பிறகு ஊர்ல இருக்கிற சின்னாக்கள், பெரியாக்கள் எல்லாம் சேர்ந்து ஒன்றாய்ச் செயற்படுறது கூடியிருக்கு.

ஏற்கனவே சொன்ன மாதிரி எங்கட ஊர்ல வைரவர் கோயில்ல நடக்கிற வருடாந்த சடங்க ஒட்டித்தான் கூத்து ஆடப்பட்டு வருகிறது. பிள்ளைகள் கூத்தில ஈடுபடுறவங்களா இருக்கிறதால கூத்தில நிண்டு செய்தது, பழகியது, ரைமுக்கு (Time) வாறது, பெரியாக்கள்ற கதையக் கேட்டு நடக்கிறது, முன்னின்று செயற்படுறது இப்படியான அனுபவங்கள பெற்றதால சடங்குகள சிறப்பாச் செய்ய முடியுது. இண்டைக்கு சடங்குகள இளம் ஆக்களே எடுத்து நடத்துறாங்க. இப்படியான ஆற்றலும் துணிச்சலும் கூத்துக்குள்ள நிண்டதாலதான் அவங்களுக்கு கிடைச்சிருக்கு.

இதே மாதிரி, எங்கட ஊர்ல யங் ஸ்டார் (Young Star) என்ற ஒரு விளையாட்டுக்கழகம் இருக்கு. மட்டக்களப்பில இருக்கிற கழகங்களுக்குள்ள இதுவும் முக்கியமானதா இருக்கு. இங்க இருக்கிற புட்போல் ரீமுகள்ல (Foot ball teams) எங்கட ரீம் முன்னுக்குத்தான் இருக்கு. இளம் பொடியன்கள் பல பேர் நல்லா விளையாடி வாறானுகள். ஒவ்வொரு நாளும் விளையாட்டுப்பழகிறது, சின்னாக்களுக்கு விளையாட்டு பழக்கிறது, ரூனமென்டுகள (Tounaments) நடாத்துறது என்று ஆர்வமா இருக்கானுகள். பொம்பிளப்பிள்ளைகளும் உற்சாகத்த வழங்குறாங்க, உதவிகளச் செய்யுறாங்க.

கூத்தாடுர, கூத்தில முன்னிண்டு செய்யுற பல பேர் விளையாட்டிலயும் ஆர்வமா இருக்கிறத நாம இங்க கவனிக்கோணும். கூத்துச் செயற்பாடுகளிற் குள்ளால பெற்ற பயிற்சிகள் விளையாட்டை விளையாட்டா விளையாடுற



ஆக்களா ஆக்கியிருக்கு. மதன், ஹரன், சின்னத்தம்பி, சுதா, சித்தா என்று முன்னனி வீரர்களெல்லாம் கூத்தாடுற ஆக்கள்தான். இதே போல விளையாட்டு பயிற்சிகளும் கூத்துக்கு உதவுது.

மற்றது முக்கியமான சம்ப வம் ஒன்ற இவ்விடத்த சொல்லலாம் என்னெண்டால், கூத்து மீளுருவாக்க செயற்பாட்டில் ஈடுபட்டு கூத்தாடி வாற ஒரு இளம் பொம்பிளைப் பிள்ளை தண்ட சித்தியை அவர்ர புருசன் துன்புறுத்தி வாறதையும் ஒரு சமயம் அவளவிட்டு விலகி தண்ட சொந்தக்காரர் வீட்டில வசித்து வந்ததையும் அவதானித்து சித்தியிடம் பிரச்சனையை கேட்டு விளங்கி அவரைக் கூட்டிக்கொண்டு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் நியாயம் கேட்டு முறைப்பாடு செய்தது. பிறகு கூத்தாடுற பெரியாக்களிட்ட விசயத்த சொல்லி அவங்க இரண்டு பேரையும் சமாதானமாக சேர்த்துவைத்தா. கூத்து மீளுருவாக்க செயற்பாட்டில ஈடுபட்டு பெண்களிற்கு இழைக்கப்படும் வன்முறைகள் பற்றி விளங்கினதாலதான் அந்தப் பிள்ளையால் துணிஞ்சி வேல செய்ய முடிஞ்சிருக்கு. அதே நேரம் கூத்தாடுற ஆக்கள் இந்தப் பிரச்சனையை சுமுகமாக தீர்த்து வைத்ததக்கொண்டு கூத்துக்கும் ஏனைய சமூக நடவடிக்கைகளிற்குமான உறவை விளங்கி கொள்ள முடியுதல்லவா.

❖ **கூத்துமீளுருவாக்கச் செயற்பாடுகளில் பங்கெடுத்ததன் வாயிலாக உங்களில் ஏதாவது மாற்றங்களை உணர்கிறீர்களா?**

உங்களோட கதைச்சுக் கொண்டிருக்கிறதே எனக்குப் பெரிய விஷயம். இதெல்லாம் சேர் அவங்களோட சேர்ந்து திரிந்து வந்ததாலதான் ஏற்பட்டது.

முதல் கூட்டங்களுக்கெல்லாம் போனால் நம்மள உறுப்பினராகக் கூட வைக்கமாட்டாங்க. இப்ப எங்கட தொழிற்சங்கத்துக்கு தலைவராக இருக்கன். அவ்வளவு துாரத்திற்கு அறிவு பெற்றிருக்கன் எண்டுதான் சொல்லனும்.

சுனாமி அடிச்சு எங்கட ஊர்ல கனபேர்ற வீடெல்லாம் அழிஞ்சு போயச்சு அப்ப மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் வீடு கட்டித்தாறத்துக்கு

முன்வந்தது. எகெட்டும் (EHED) சில வீடுகளைக் கட்டிக் கொடுத்தது எங்களுக்கும் எல்லாரையும் போல நிலத்தோட சேர்ந்ததான அடித்தளம் போட்டு வீடு கட்டத்தான் பிளென் (Plan) போட்டாங்க. ஆனால் எங்கட ஊர்ப்பகுதி அலைவந்தா லேசா ஓடிவந்தடிக்கக்கூடியதான ஆற்றங்கரைப் பகுதி அதனால நிலத்தில் கொண்கிறீற் தூண்களைப் போட்டு அதற்கு மேல பிளேட்டு போட்டு அப்செயார் வீடு கட்டினாத்தான் தண்ணி வந்தாலும் கீழால போகும், நாங்களும் நிம்மதியா இருக்கலாம். உண்மையா அப்படியான வீடுகள்தான் நிண்டு பிடிக்கும். இதத்தான் நாங்க பலபேர் விரும்பினம் ஆனால் வீடெல்லாம் அழிஞ்சி போய் அவதிப்படக்க யாராவது ஒரு வீட்டைக் கட்டித் தரட்டும் என்டுதான் பெரும்பாலானாக்கள் இருந்தாங்க. சாமிட்ட (இராமகிருஷ்ண மிஷன் மடத் தலைவர்) நம்மட விருப்பத்த எப்படிச் சொல்ற, இல்லாட்டி என்னத்த சொல்ற எண்டு பேசாம இருந்தாங்க. சாமி ஊர்ல இருக்கும் எல்லாரையும் கூப்பிட்டு மீற்றிங் (Meeting) வைச்சார். நான் மீற்றிங்கில எழும்பி சாமியிடம் தெளிவாச் சொன்னன் சாமி இந்த மாதிரியான வீடுதான் எங்களுக்கு வேணும்; இது தான் உண்மையா நிண்டு பிடிக்கக்கூடியது; வேற மாதிரியெண்டா எனக்கு வேணாம் என்று. கொஞ்ச நாளைக்குப் பிறகு சாமி எங்கள கூப்பிட்டு நீங்க சொன்னமாதிரி வீடு கட்டுறதே நல்லது. நானும் பலபேரோட கதைச்சன் அவங்களும் அதத்தான் சொன்னாங்க அதால நீங்க சொன்னமாதிரியே கட்டித்தாரனென்டு சொல்லி இணங்கினார். பிறகு கணிசமானாக்கள் அப்படியான வீட்டையே விரும்பிக் கட்டினாங்க. இதை ஏன் சொல்கிறேன் என்றால், முன்னுக்கு வந்து யாரோடயும் தெளிவா கதைச்சுப் பழகாத, பயப்படுற நான் கதைச்சதுதான். கூத்துக்குள்ள நிண்டு பெற்ற பயிற்சிகள்தான் காரணம்.

ஆரம்பத்தில் என்ர மச்சான் ஒருவன் கேட்டான் 'ஒரே கூத்தாடுறீங்களே ஊருக்குள்ள மட்டுந்தானா ஆடுற? வெளியிடங்களில் ஆடுறேல்லயா?' எண்டு. கிட்டடியில் அவனச் சந்திக்க நான் சொன்னன் நீ அப்ப கேட்டயே, பார்த்தாயா நாங்க இப்ப எவ்வளவு இடங்களில ஆடுறம், கெம்பஸில, யாழ்ப்பாணத்தில, வேறவேற ஊர்கள்ல என்டு. கூத்து மாநாடொன்டே

நாங்க நடத்தினம் அதில வந்த ஆக்களோட கதைச்சம், விளக்கம் கொடுத்தம். இதெல்லாம் எப்படி நடந்தது எல்லாம் இந்தப் பயிற்சிகள்தான்.

**16. இவ்வாறான ஆளுமைகளைப் பெற்றுக் கொண்டதைப்போல இக் கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டதால ஏதாவது இழப்புகளைச் சந்தித்ததுண்டா?**

இழப்புக்களா .... அப்படி ஒண்டும் இல்ல.

**❖ குடும்பத் தலைவராக இருந்து கொண்டு கூத்துச் செயற்பாடுகளில் பங்கு கொள்வதில் ஏதாவது சவால்களை எதிர்கொண்டதுண்டா?**



ஒரு பிரச்சனையும் வரல. அதை ஒரு சவாலா எடுத்துச் செய்தனான். வீட்டுக்குத் தேவையான வேலைகளையும் செய்துகொண்டு இதையும் கவனிச்சன் வீட்ட எனக்கு எதிர்ப்பு வரல்ல. எண்ட மனைவியே சொல்வா 'ரைமுக்கு (Time) போங்க, அப்படிப் படிங்க இப்படி வடிவா ஆடுங்க' எண்டு.

**❖ கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளில் இளந் தலைமுறையினரின் ஈடுபாடு எவ்வாறுள்ளது?**

இளமாக்கள் ஆர்வமாத்தான் இருக்காங்க. கூத்துமீளுருவாக்க வேலை ஆரம்பிக்கக்க சின்னச் சின்ன ஆக்களா அங்க இஞ்ச ஓடி புதினம் பார்த்துத் திரிஞ்சாக்கள்தான் இண்டைக்கு பெரிய கூத்தாட்டக் காரர்களா இருக்காங்கள். கூத்துப் பழக்கிறாங்கள். வேற ஊர்களிலி ருந்தும் இளம் பொம்பிளைப் பிள்ளைகள், பொடியனுகள் வந்து கூத்துப் பழகுறாங்க எங்களோட சேர்ந்தாடுறாங்க. பள்ளிகளிலி ருந்தும் கெம்பஸில இருந்தும் சில பிள்ளைகள் கூத்துப் பழக வந்து போறாங்க.

❖ **கூத்து, நாடகம் என்று பிள்ளைகள் (சிறுவர்கள்) ஈடுபட்டுத் திரிவதால் அவர்களது படிப்பு குழம்புகின்றதாக சில பெற்றோர்கள் கூறுகிறார்களே அது பற்றி உங்களது கருத்து என்ன?**

அவங்க விளங்காத தன்மையில கதைப்பாங்க. நாங்க படிப்பு விசயத்தையும்தான் கூத்துக்குள்ள செய்யிறம்.கூத்து மட்டும் ஆடல்ல. விளங்கின பிள்ளைகள் எங்களோட வந்து ஆடுவாங்க. இந்தா பாருங்க சுகந்தன், மதன், பாணு, சித்தா, ரஜிதா, ரொசானி என்று எல்லாரும் கூத்துக்குள்ளாலதான் படிச்சு முன்னுக்கு வந்திருக்காங்க. சிலர் நல்ல வேலையிலயும் இருக்காங்க. யாரும் படிப்பக் குழப்ப மாட்டாங்க படிக்கிற பிள்ள படிக்கும். சில பெற்றார் தங்கட பிள்ளையல கூட்டிவந்து கூத்துப்பழக்கச் சொல்றாங்க. எண்ட மகளும் கூத்தாடுறா. இந்த முறை O/L சோதனைக்காக படிக்காள் சோதனை முடிய திரும்பவும் வந்து ஆடுவாள்.



❖ **மீளுருவாக்கச் செயற்பாடுகளில் பங்கெடுப்பதற்கு முன்பு நீங்கள் கூத்துக்களில் ஆடியதற்கும் தற்போது கூத்துக்களில் ஆடுவதற்கும் இடையில் உங்களது அளிக்கை முறையில் ஏதாவது முன்னேற்றம் உண்டா?**

நிறைய உண்டு. ஆரம்பத்தில நான் பிழைகள் விட்டன் ஆனால் இப்ப இல்ல. மற்றவங்களுக்கு ஆட்டங்கள் பழக்கிக் கொடுக்கிறது, பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறது எல்லாம் இப்ப நான் செய்வன். முதல் நமக்குத்தான் சொல்லிக் கொடுக் கோணும்.

ஆரம்பத்தில சில பாட்டுக்கள், விருத்தங்கள் விளங்கிறதுக்கு கஸ்ரமாயிருந்ததும் ஒரு காரணம் ஆனால் மீளுருவாக்கத்துக் குள்ளால அவற்றை விளங்கிக் கொண்ட தால, ஏன் இப்படி இப்படியிருக்கு எண்டு புரிஞ்சு கொண்டதால்தான் ஆடுறது பாடுறது லேசா இருக்குது. எல்லாத்தையும் நல்லா செய்ய முடியுது.

ஊர்ல கூத்துப் பழக்கக்க மற்றாக்களுக்கு பழக்கிக் கொடுக்கிற மட்டுமில்லாமவேற இடங்களிலயும் ஆட்டங்கள் பாட்டுக்கள் சொல்லிக் கொடுக்கிறளவுக்கு நான் நல்ல முன்னேற்றத்தை அடைஞ்சிருக்கன்.

போனவருஷம் மூன்றாவது கண் குழு சார்பில, மட்டக்களப்பில் இருக்கிற மாணவர் இல்லங்களுக்குப் போய் பிள்ளையல்களுக்கு கூத்து ஆட்டங்கள், பாடல்கள் சொல்லிக் கொடுத்தன். அவங்களும் ஆர்வமாய் பழகினாங்க, நிகழ்ச்சிகளும் செய்தாங்க.

❖ **எழுதி, வாசித்து பாடல், விருத்தம் தாளக்கட்டுக்களை புரிந்து கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்ளும் நீங்கள் எவ்வாறு உங்களது பாத்திரத்தை தயார் செய்து கொள்கிறீர்கள்?**

எண்ட பாத்திரத்துக்குரிய பாடல்கள், விருத்தங்கள எண்ட மகள் எழுதித் தருவா. கூத்துப் பழகக்க அவளும் இருந்து பார்க்கிறது, கேட்கிறதால அவளும் நல்லாப்பாடுவா, ஆடுவா. சின்னவயசிலேயே கட்டியக்காரனுக்கு கூத்து ஆடியிருக்கா. எண்ட பாட்டுக்களை மகளப் படிக்கச் சொல்லுவன் அவள் பாடக்குள்ள கேட்டுப் படித்துப் படித்து நான் பழகிக் கொள்வன். இதேபோல கூத்துப் பழகக்க ஏட்டண்ணாவியார், பிற்பாட்டுக்காராக்கள் பாட நான் கேட்டுப்பாடிப்பாடி பாடமாக்கிடுவன். ஆட வெளிக்கிட்டா பாட்டு விருத்தம் எல்லாம் தானா வரும் அது ஒரு கஷ்ரமும் இல்ல. ஆனால் விருப்பத்தோட ஒழுங்கா பழகொணும் அதுதான் முக்கியம்.

❖ **மட்டக்களப்பில பல்வேறு ஊர்களில் பாரம்பரியமாக கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. உங்களது ஊரில் இடம்பெற்றிடும் மீளுருவாக்கச் செயற்பாடுகளுக்கான இவர்களது ஆதரவு, அங்கீகாரம் எவ்வாறிருக்கிறது?**

ஒவ்வொரு ஊருலயும் தங்க தங்களுக்கென ஒரு முறையில கூத்தை ஆடிவாறங்க. சில ஊர்களைச் சேர்ந்தவங்களுக்கு நாங்க செய்யிற வேலை பற்றித் தெரியும். நான் முன்னுக்கு சொன்ன மாதிரி கன்னங்குடா, களுவன்கேணி, சித்தாண்டி, கருவேப்பங்கேணி போன்ற ஊர்க் கூத்துக்காரர்கள் எங்களோட நெருக்கமாயிருக்காங்க.

நாங்க கூத்தாடக்க அவங்க வாறது, அவங்க கூத்தாடக்க நாங்க போறது. கூத்துக்களுக்கு உதவி செய்யிறது உதாரணமா சதங்கை, மத்தளம் போன்ற பொருள்களை பரிமாறிக் கொள்வது, சில நிகழ்ச்சிகளில சேர்ந்தாடுறது இவைகளால இவங்க விளங்கியிருக்காங்க. வேறவேற ஊர் அண்ணாவிமார், கூத்துக்காரர்களோட சந்திப்புகள நடத்திறதால பலபேர் இதைப்பற்றி நல்லா விளங்கியிருக்காங்க. தங்கட ஊர்லயும் இப்படி வேல நடக்கொணும் எண்டும் விரும்புறாங்க.



❖ **பொதுவாக எல்லாக் கூத்துச் சமூகங்களிலும் தமக்கென ஒரு கூத்துருவாக்க ஒழுங்கு கடைப்பிடிக்கப் படுவது வழமை. சீலாமுனையில் இவ் ஒழுங்கு எவ்வாறமைந்துள்ளது?**

கூத்து ஒன்று ஆட வேணுமெண்டா ஆரம்பத்தில அண்ணாவியார், ஏட்டண் ணாவியார் மற்ற பெரியாக்கள் சிலர் சேர்ந்து கதைச்சி, என்னகூத்து, என்னென்ன பாத்திரம் என்பதை தீர்மானிச்சித்து கூத்தாடுறாக்களுக்கான கூட்டம் ஒன்ற வைத்து ஆடப்போற கூத்தைப்பற்றி சொல்வாங்க. பிறகு, நிறைகுடம் வைச்சு தேவாரம்பாடி காப்புப் பாடி பிள்ளையாரைக் கும்பிட்டு அண்ணாவியார் ஒவ்வொரு பாத்திரமா கொடுப்பாரு. துண்டொன்றில யாருக்கு என்ன பாத்திரம் என எழுதிக் கொடுப்பாரு ஒவ்வொருவரும் அண்ணாவியாருக்கு குருதட்சணை கொடுத்து தங்கட பாத்திரத்தை பெற்றுக்கொள்வாங்க. பிறகு கூத்துப் பழகிறத்துக்கான நேரத்த தீர்மானிச்சு பழகிறது, பழகி ஆட்டம் பாட்டு எல்லாம் நல்லா வந்ததும் சதங்கையோட ஆடிப்பார்த்து பிறகும் ஆட்டம், பாட்டு, நடிப்பு, சரியா வராதாக்கள் ஆளுக்காள் பழகிறது.

இப்படிப்பழகி அரங்கேற்றத்தில் ஆடுததுதான். ஆரம்பத்தில இந்த ஒழுங்கு கொஞ்சம் வித்தியாசமா இருந்தது. அதாவது கூத்தாடமுதல் அதற்கு பொறுப்பா ஒரு நிர்வாகம் தெரிவாங்க அதில முன்னீடுகாரர், அவர் இவர் எண்டு சிலர் இருப்பாங்க. அந்த நிர்வாகத்துக்கு கட்டுப்பட்டுத்தான் கூத்தாடணும். இப்பவும் நிர்வாகம் தெரியிறதுதான் எண்டாலும்

முன்னையமாதிரி கட்டுப்பாடுமில்ல நிறையச் செலவுமில்ல.

**❖ இப்போது அதிக செலவு இல்லை என்று சொல்வதற்கான காரணம்?**

முதலய மாதிரி இப்ப விடிய விடிய கூத்தாடுறதில்ல. மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்களுக்குள்ள கதையை சுருக்கித்தான் ஆடுறது. அதோட முதலய மாதிரி பளபளப்பான உடுப்புக்களோ, கிரீடம், கவசங்களோ தேவையில்லை. அண்ணாவியாருக்கும் அப்படி அதிகமா பணம் கொடுக்கேலாது. அவர் அத விரும்பிறதும் இல்ல. முதலெல்லாம் வளவு வித்துக்கூட கூத்தாடி இருக்கம். அந்நேரம் சில கட்டுப்பாடுகள விதிச்சிருக்காங்க, இப்ப அப்படி இல்ல.

**❖ கூத்துக்கான பாத்திரத் தெரிவில் அண்ணாவியார் பக்கச் சார்புடன் செயற்படுவதாக ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுகிறது இது பற்றிய உங்கள் கருத்தென்ன?**


சி.ஞானசேகரம்-அண்ணாவியார்

அப்படியில்லை அவர் தெரிவு செய்வார். அவருக்குத் தெரியும் இந்தப் பாத்திரத்துக்கு இவரைத்தான் தெரிவுசெய்ய வேணும் எண்டு. குரல்வளம், ஆள்ற தோற்றம், அவர் ஆடுற பாடுற விதம் எல்லாத்தையும் பார்ப்பார், அவர் இவ்வளவு காலமும் ஆடியிருக்கிறதையும் பார்த்துத்தான் கொடுப்பார்.

அண்ணாவியெண்டா எல்லா ஆடல், பாடல், தாளக் கட்டுக்களும் தெரிஞ்சிருக்கோனும் ஆம்பிள, பொம்பிளக் கூத்துக்கள்ல (பாத்திரங்கள்) ஆடியி ருக்கொனும். மத்தளமும் அந்த மாதிரி அடிக் கொனும் அவர்தான் அண்ணாவி. அவர் பிழைவிட மாட்டார்.

❖ **உங்களது ஊரில் இதுவரை காலமாக இடம்பெற்று வந்துள்ள மீளுருவாக்கச் செயற்பாடுகள் போதியளவு திருப்தியினைக் கொடுத்துள்ளனவா?**

கூத்து நல்லாத்தான் போய்க் கொண்டிருக்கு. ஏற்கனவே சொன்னமாதிரி ஆரம்பத்தில் இந்தக் கூத்து வேலைகள விளங்காதாக்கள் பலபேர் இப்ப தெளிவா விளங்கியிருக்காங்க. புதுப் புதுப் பிள்ளைகள் கூத்தாட வருதுகள்.

ஆடுற பாடுற உடை ஒப்பனை எல்லாத்திலயும் முதலய விட இப்ப நல்ல முன்னேற்றம் தெரியுது. புதுப்புதுப் கூத்துக்கள எழுதி ஆடக்கூடியாக்களா மாறியிருக்கம். சின்னாக்கள் மத்தளம் அடிக்கப் பழகியிருக்காங்க.

இப்படி முன்னேற்றம் அடைஞ்சிருக்கம் என்றாலும் சில சவால்களையும் எதிர் கொள்ள வேண்டியே இருக்கு. படிப்பு, விளையாட்டு, வேலை என்று ஆர்வம் காட்டிறளவுக்கு இளமாக்கள் கூத்துச் செயற்பாடுகளில ஆர்வம் காட்டிறது குறைவாகத்தான் இருக்கு. பொம்பிளப்பிள்ளைகள் ஒரு சிலரைத் தவிர பலபேர் விளங்கியும் கூத்தில ஈடுபட முன்வராமலிருக்காங்க.

கூத்தில ஈடுபடும் சிலரது ஒழுங்கின்மைகள் மற்றாக்களையும் பாதிக்குது. பெரியாக்கள் கூட தங்கட தனிப்பட்ட வேலைகளுக்கு கொடுக் கிற முக்கியத்துவத்தை இப்படியான செயற்பாடுகளில் காட்டுவது குறைவு. இப்படியான சிக்கல்களையும் எதிர்கொண்டேயாக வேண்டி யிருக்கு.

❖ **இவ்வாறான சவால்களை எதிர் கொண்டு தொடர்ந்தும் இக் கூத்துச் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?**

நாங்க இப்பவும் கூத்தாடிக்கொண்டுதான் இருக்கம். ஆனால் இன்னும் கொஞ்சம் ஆர்வமாகவும் அதிகமாகவும் வேலை செய்யணும்.



பிள்ளைகள முன்னெடுத்துச் செல்லக் கூடியளவுக்கு வளர்த்து விட்டிருக்கம் அவங்க கவனம் எடுக்கவேணும். பெரியவங்க அவர்களுக்கு உதவியாகவும் அவர்களை நல்ல வழிக்கு கொண்டுவாராக்களாகவும் இருக்கணும். என்னவழிப்பட்டாவது கூத்த ஆடணும்.

**❖ கூத்தின் புத்துருவாக்கம், நவீனவாக்கம், மீள்கண்டுபிடிப்பு என்ற பெயர்களில் சில பேராசிரியர்கள், தன்னார்வக் குழுக்களைச் சேர்ந்த சிலர் மேற்கொண்டுள்ள கூத்து நடவடிக்கைகளுக்கும் நீங்கள் பங்கெடுத்துள்ள கூத்துச் செயற்பாடுகளுக்குமிடையில் ஏதாவது வித்தியாசம் உண்டா?**

அடிப்படையிலேயே வித்தியாசமிருக்கு. அவங்க செய்யிறது மீளுருவாக்கமில்ல. ஏனெண்டா ஊர்களில ஆடுற கூத்துக்களில சில பகுதிகள எடுத்து சுருக்கி படச்சட்ட மேடையில நாடகம் மாதிரி செஞ்சு போட்டு கூத்தெண்டா அது கூத்தா? யாரோ சிலருக்காக இப்படிச் செய்யிறாங்க. மற்றது, ஒவ்வொரு ஊரிலயும் ஒவ்வொரு கூத்திருக்கு. அந்தந்த ஊர்ல அவங்க அவங்கள்ர விருப்பத்திற்கேற்ற மாதிரி ஆடிவாறாங்க. அவங்க எல்லோரும் பங்கு பற்றி வாறாங்க. ஆனால் இவங்க என்ன செய்யி றாங்க அவைகள கவனி யாம ஊர்களில இருந்து கூத்துக்கள எடுத்துக் கொண்டு சுருக்கி தங்க ளுக்குரிய மாதிரி செஞ்சு பொட்டு ஊர்ல கூத்து ஒழுங்கா ஆடுறல்ல, குடிச்சித்தாடுறாங்க, அவங்களிட்ட இருந்து கூத்தப் பாதுகாக்கணும் எண்டுறாங்க. எங்களிட்டயும் இப்படித்தான் பலபேர் வந்து போனாங்க. படிச்சாக்கள் ரிசேச் அது இதெண்டு வந்து எங்களிட்ட எல்லாம் கேட்டு விளங்கித்துப் போய் தாங்கதான் எல்லாம் செய்த மாதிரி எழுதி முடிச்சிடுவாங்க. படிப்பிப்பாங்க. இப்ப நாங்க அவர்களப் பற்றி நல்லாப் படிச்சித்தம்.

ஆனால் நாங்கள் சேர்ந்து செய்யிற மீளுருவாக்க வேலை அப்படிப் பட்டதில்ல. கூத்தை ஊராக்களிட்டிருந்து பிரிச்சுத்துப் போறதோ இல்லாட்டி சுருக்கிப் போட்டு மேடையில ஆடுவதோ இல்ல. கூத்தாடு பவர்களே இந்தக் காலத்திற்குரியமாதிரி கூத்தில கட்டாயம் மீளுருவாக்க வேண்டிய விடயங்கள விளங்கி மீளுருவாக்கி அவர்களே அவர்களுக்கு ரியமாதிரி தொடந்து ஆடுறதான செயற்பாடு.

ஜெயசங்கர் சேர் அப்படித்தான் எங்களோட வேலைசெய்தார். எங்களை ஏமாத்தல்ல எங்களோடயே நிண்டார். இப்பவும் நிற்கிறார். இப்ப சேர் இல்லாட்டியும் நாங்க கூத்தை பொருத்தமா மீளுருவாக்கி எழுதிப்பழகி ஆடக் கூடியாக்களாக இருக்கிறம். கடைசியா ஆடின இரண்டு கூத்துக்களும் சேரில்லாம நாங்களே மீளுருவாக்கி ஆடினதுதான். இப்பவும் மீளுருவாக்கம் செஞ்சு கொண்டுதான் இருக்கம். அது தொடர்ந்து நடக்கிற ஒரு வேல.



இன்னொரு விஷயம் என்னெண்டா, நாங்க மீளுருவாக்கம் செய்து 'கூத்து மீளுருவாக்கம்' என்ற வேலை எல்லா இடங்களிலயும் மதிப்பு பெற்று பரவலாக்கம் பெற, ஏற்கனவே கூத்தச் சுருக்கி மேடையில ஆடி, நவீன நாடகங்களா செய்து வந்தவர்கள் அந்த வேலைகளையும் இப்ப கூத்து மீளுருவாக்கம் என்று சொல்ல வெளிக்கிட்டிருக்காங்க.

எங்கட வேலைகளைக் குழப்பி தப்பா பிரச்சாரம் செய்யிறதுக்கு அவங்க இப்படி சொன்னாலும் அதுகூட எங்கட கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளுக்குக் கிடைச்ச வெற்றிதான்.

❖ **தொலைக்காட்சித் தொடர்நாடகங்கள், சினிமா என்று வெகுஜன ஊடகங்கள்பால் மக்கள் ஈர்க்கப்பட்டுள்ள இன்றைய நவீன சூழலில் பாரம்பரியக் கூத்துக்கள் சரிவராது, அவை அழிந்து போய்விடும் என்பதான கருத்துக்கள் பலரால் முன்வைக்கப்படுகிறதே இது பற்றிய உங்கள் கருத்து?**

ஓம். இண்டைக்கு எல்லாரும் ரீவியில (Television) நாடகம், படம் எண்டுதான் இருக் காங்க. கூத்தாடி வந்த சில ஊர்களில இப்ப கூத்தாடுறது குறைஞ்சிருக்கு. எண்டாலும் பல ஊர்களில இண்டைக்கும் கூத்தாடிக் கொண்டு தான் இருக்காங்க. அதையும் நாம



கவனிக்க னும் கூத்தை நாம விடேலாது. கூத்தெண்டா ஒரு கூட்டமே பங்கு பற்றுது. ஆடுறாக்கள் மட்டுமில்லாம ஊரெல்லாம் சேர்ந்துதான் கூத்து செய்யிறம். சும்மா ரீவியைப் பார்த்துத்துப் போறதுக்கும் நாமளே ஆடிப் பாடி மகிழ்ச்சியடையிறதுக்கும் இடையில எவ்வளவு வித்தியாசமிருக்கு.

இப்படியிருக்கிறத குழப்பொணுமெண்டுதான் ரீவியில அடுக்கடுக்கா நிகழ்ச்சிகள் வந்திருக்கு. நாம விளங்கியும் விளங்காமலும் எப்ப பார்த்தாலும் ரீவிக்கு முன்னாலயே குந்தியிருக்கம். விளங்கினாக்க ளாவது இப்படியான பாரம்பரியக் கலைகளை முன்னெடுக்கோனும். அழி யாமல் பாதுகாக்க வேணும். அழிஞ்சி போகுது, அழிஞ்சிடும் என்று சொல்லித்தி ருக்கிற மட்டும் அர்த்தமில்ல. இப்படிச்சொல்வது, எழுதுவது தான் எல்லாத்தையும்விட மிக ஆபத்தானது. வேலை செய்யனும். அத விட்டுப்போட்டு அத இதச் சுருக்கி ஒண்டு ரெண்ட மட்டும் வைச்சுத்து இதுதான் அது எண்டுத்துப் போனா நாமளே நம்மள அழிக்கிற மாதிரித்தானே. சிக்கல்கள, சவால்கள எதிர்த்து ஊரோட சேர்ந்து அவங்க அவங்களுக்குரிய வகையில எல்லாம் அமையுற மாதிரி வேகமா வேலை செய்யோனும். அதுதான் இண்டைக்கு எமக்கு தேவையாயிருக்கு.

❖ **கூத்தே தெரியாத ஒருவர், புதிதாக உங்களிடம் கூத்துப்பழக வருகையில் நீங்கள் அவரை நல்லதோர் கூத்துக்கலைஞராக்க எவ்வாறான பயிற்சிகளை வழங்குவீர்கள்?**

முதலில் அவர் கூத்தாடுறதப் பார்க்கவேணும். எப்படியாடுறாங்க, பாடுறாங்க எண்டுறதப் பார்த்து கூத்தெண்டா என்னெண்டு விளங்கொனும். பிறகு, மெல்ல மெல்ல ஆடுறதுக்கு பாடுறதுக்கு பழகொணும். பிற்பாட்டுக்காரரா நிண்டு பாட்டு, விருத்தம், தாளக்கட்டுக்கள விளங்கிச் சொல்லிப் படிச்சுப் பழகலாம். மற்றவங்க ஆடக்குள்ள பக்கத்தில நிண்டு ஆடிப்பழகலாம்.
எங்கட கண்டிப்புக்களில்லாம அவர் பழகிவரக்குள்ள நாங்க அவர்ர பிழைகளைச் சரி செய்வம்.

கூத்தில ஆடுற பாடுற வேலை மட்டுமில்லதானே பிற்பாட்டுப் பாடுறது, மத்தளம், தாளம் வாசிக்கிறது, உடுப்பு ஒப்பனை வேலைகளைப் பார்கிறது, கொப்பி பார்க்கிறது (Prompter), கூத்தெழுதிறது என்று கனக்க இருக்கு. அவர் ஆடப்பாடப் பழகிற அதே நேரம் மத்ததுகளயும் பழகலாம்.

இப்படிப் பழகி, ஒண்டு இரண்டு கூத்துக்களில ஆடினாரெண்டா அவருக்கு கூத்து ஆடொணும் என்ற ஆசையும் துணிவும் வரும். அப்போது அவரே தன்ர குறைகளைக் கண்டுபிடிச்சு திருத்தமாச் செய்யப் பழகிக் கொள்வார். நாங்களும் பழக்கி விடுவம்.

❖ **இறுதியாக, கூத்தின் முக்கியத்துவத்தையும் அதை முன்னெடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தி அடுத்த சந்ததியினருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

அதுதான் முன்னமே சொன்னனே, கூத்தை விடேலாது. அது நமக்குத் தேவை. இண்டைக்கு கூத்து ஒரு பாடமாக (subject) பள்ளிகள், பல்கலைக்கழகங்களில படிப்பிக்கப்படுது. நல்ல விஷயம். ஆனால்



சோதனைக்கான (Examination) ஒரு பாடமா படிக்கிறதோ, போட்டிக்காக ஒன்று இரண்டு ஆட்டத்தப் பழகிறதோ எண்டில்லாம அதை முழுமையா ஆடுறதுக்கும் படிக்கொணும். மிகச் சில ஆக்களே அப்படிப் படிக்கி றாங்க, படிப்பிக்காங்க.

ஊர்ல இருக்கிற இளமாக்கள் விருப்பத்தோட இதை முன்னெடுக் கொணும். கூத்துத் தெரிஞ்ச பெரியாக்களிட்ட கேட்டுப்பழ கோணும். இங்க மட்டுமில்ல ஒவ்வொரு பிரதேசத்திலயும் இருக் கிற எல்லாக் கூத்துக்களையும் பாதுகாக்கவேணும். பாதுகாக்கிறதெண்டு கூத்துப் போட்டோக்கள், மத்தளம் சதங்கை, உடுப்புக்களை வைச்சு மியூசியமாக்கிறதச் சொல்லல்ல. அத ஆடுறதச் சொல்றன்.

பெற்றார் இதை விளங்கி தங்கட பிள்ளைகளை கூத்தாட விடவேணும். அடுத்தடுத்த தலைமுறைக்கு நாம இதைக் கையளிக்க வேணும். இது முக்கியமான ஒன்று, நமக்கு தேவையானது என்று விளங்கி விருப்பப் பட்டால்தான் நாம இதில ஈடுபட முடியும்.

■



ஏற்கனவே கட்டமைக்கப்பட்டிருக்கும் அரங்க அறிவியலை கேள்விக்கிடமின்றி மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது ஓர்அரங்கியல் மாணவருக்கு அழகன்று. மாறாக விமர்சன பூர்வமாக உண்மையினை வலியுறுத்த முனைவதே சரியான அரங்கியலாளரின் கடமையாகும். இதுவே ஆக்கபூர்வமான அரங்கின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

அரங்கியலாளரான த.விவேகானந்தராசா அவர்கள் இதுவரை காலமும் கட்டமைக்கப்பட்டிருக்கும் பாரம்பரிய அரங்குகள் பற்றிய அறிவுருவாக்கத்தின் அரசியலை நன்கு விளங்கிக்கொண்டு அப்புரிதலின் பின்னணியில் பாரம்பரிய அறிஞர்களது கருத்துக் களை அவர்களது மொழியில் வெளிக்கொண்டுவர முற்பட்டுள்ளார்.

இந்த வகையில், கலைஞர் சந்திப்புக்களில் சி.விஜேந்திரனுடன் தான் உரையாடிய விடயங்களைத் தொகுத்து ஒரு நேர்காணலாக இங்கு பதிவு செய்துள்ளார். சி.விஜேந்திரன் அவர்களுடைய கூத்துக்கலை பற்றியதும், கூத்து மீளுருவாக்க ஆய்வுச் செயற்பாடு பற்றியதுமான அனுபவங்கள், கருத்துக்கள் இந்நூலில் வெளிக்கொணரப்படுகின்றன



வெளியீடு
மூன்றாவது கண்
உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக்குழு